1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele { grams: "CATHOLIC PRESS" JAFFNA
{ phone: No. 100.

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

78-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு மார்கழி மாதம் 10-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 48-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### ஆசிரியர்களின் ஞானஒடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசன கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களின் இரண்டாவதுபிரிவான ஞானவொடுக்கம் கொழும்புத்துறைச் சஞ்சுசையப்பர் தாபனத்திலே சென்ற 8-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஆரம்பமாகி நடந்தேறி வருகிறது. நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் அதற்குச் சமுகமளித்திருக்கின்றார்கள். தூத்துக்குடி மேற்றிராசனத்தைச்சேர்ந்த பேரான பிரசங்கியாரான வண. மரிய ஞானம்சுவாமியவர்களே ஞானவொடுக்க போதகம்செய்து வருகின்றார்.

### கல்லூரி விடுமுறை

சம்பத்திரிசியார் கல்லூரியின் கத்தால் – புதுவருடப்பிறப்பு விடுமுறை சென்ற 4-ந் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாயிற்று. விடுமுறைமுடிந்து மறுபடிகல்லூரி வருகிற தைமாதம் 5-ந்திகதி ஆரம்பமாகும்.

### ஓர் நல்லசெய்தி

அடுத்துவரும் ஞாயிறுவாரம் 13-ந் திகதிகாலை 9-10மணியளவில் வங்காலை, அர்ச். செசிலியா சங்கீதசபையாரால் "மெசியாவின் வருகை" என்ற ஓர் நாடகம் வானொலிமூலம் ஒலிபரப்பப்படும். இரட்சகரின் வருகைக்கு ஆயத்தம்செய்யும் இந்த ஆகமனகாலத்தில் இந்நாடகத்தைக் கேட்பது மிகுந்த பயனுடையதாக இருக்கும். மிகுந்தகரிசனையோடு ஆயத்தம்செய்யப்பட்டிருக்கும் இந்நிகழ்ச்சியானது சாரமும், உயர்ந்த சங்கீதபண்பும் உடையதாக இருப்பதால் இரசிகர்கள் இதனைத் தவறவிடமாட்டார்கள் என நம்புகின்றோம்.

### வழக்குத்தொடர்ந்த பலன்

வட்டுக்கோட்டை தறளுங்கிராமத்திலே எமாலின் ஹராயினுமபெண் ஒன்பதுனைக் கெற் கஞ்சா வைத்திருந்தாளென்று மதுபரிபாலன உத்தியோகஸ்தரால் குற்றஞ்சாட்டிச் சென்றதிங்கட்கிழமை பலப்பிட்டிக்கோட்டிலே வழக்குத் தொடரப்பட்டாள். நீதிபதி அவளைக் குற்றவாளியாகக்கண்டு 25 ரூபா அபராதம் விதித்தார். ஆனால், அதை இறுக்க அவளுக்குக் கெதியில்லை. அதனால் வழக்குத்தொடர்ந்த மதுபரிபாலன உத்தியோகஸ்தர்களும், கோட்டில் சமுகமாயிருந்த வழக்கறிஞர், பிரயவாதிகளும் மனமிரங்கி அந்த 25 ரூபாவையும் தங்களுள் சேர்த்துச் செல்லக் கட்டினார்கள் அவள் தன் தலையில் ஓர் குழந்தையை ஏந்திக்கொண்டு, மற்றிரு பிள்ளைகள் பின்தொடர நீதிபதிமுன்போய் நின்ற பரிதாபகாட்சி அவர்களை மனமிரங்கச் செய்ததுபோலும்.

## இலங்கையருக்கே இலங்கை

"இலங்கையருக்கே இலங்கை சொந்தமானது; மற்றப்படி, எந்தஒரு சாதியத்துக்கோ அல்லது சமயத்துக்கோ அது சொந்தமல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுமாறு இந்நாட்டுமக்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்; ஒரே சகோதரங்களாக ஒற்றுமைபூண்டு வேலைசெய்வதில்தான் நாட்டின்முன்னேற்றம் தங்கியிருக்கிறது; தற்போது அரசாங்கத்தை எதிர்நோக்கியிருக்கும் கஷ்டமான பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு எல்லோருடையவும் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது" என்று நோலபேஸ் ஹொட்டலிலே சென்றவியாழக்கிழமை தமக்குஅளிக்கப்பட்ட ஓர் விருந்திலே பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் கூறியிருக்கின்றார்.

## யாழ்ப்பாணக் கடலேரித்திட்டம்

தொண்டைமானாற்றுக் கடலணை அமைக்கப்பட்ட காரணமாக உள்ளூரில்பெய்த மழைநீர்முழுவதும் சமுத்திரத்திற்குப் போகாமல் ஊரிலேயே தங்கியிருக்கிறது. அதனால் பரவைக் கடலையடுத்த பரந்தவெளி முழுவதும் ஓர் சிறுகடல்போன்று காணப்படுகிறது. மழைநீர் சமுத்திரத்திற்போய் விழாது தடைபடக்காரணமான யாழ்ப்பாணக் கடலேரித்திட்ட வேலையின் மற்றோர்பகுதி சமீபத்தில் ஆரம்பமாகியிருக்கிறது. ஆனையிறவுப் பரவைக்கடலைச் சுத்தநீர்ஏரியாக்கும்வேலையும், அங்கிருந்து தொண்டைமானாறுவரையிலே வெட்டப்படவிருக்கும் பெரிய வாய்க்கால்வேலையும் மும்முரமாக நடைபெற்றுவருகின்றன. இந்தக் கடலேரித்திட்டத்தின் நோக்கம், யாழ்ப்பாணத்திலே மிகப்பெரிய கமத்தொழில் பிரதேசமொன்றை ஆக்கி இந்நாட்டின் வளத்தை அதிகரிக்கச் செய்வதேயாம்.

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

"திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக அவர்களைத் தலைவராகக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியானது சென்ற ஹார்த்தாலன்ற வேலைநிறுத்த சம்பவத்தின்போதே இறந்துவிட்டது; இறந்துபட்ட அந்தக்கட்சி இப்போது லங்கா சமசமாஜகட்சியைத் தன்னுடன்சேரும்படி மன்றாடிக்கொண்டிருக்கிறது" எனச் சென்ற 5-ந் திகதியன்று வெலிகம்பிட்டியில் நிகழ்ந்த ஓர்கூட்டத்தில் டக்டர் கொல்வின் ஆர். டி சில்வா கூறியிருக்கின்றார். நிற்க, அன்றுதினமே மகவகொடையில்நிகழ்ந்த கூட்டமொன்றில் மகாக்கிராம் டி. சி. ஏ. மதுரபிரேமா என்பவர் பேசியபோது: "திரு. பண்டாரநாயக அவர்களை நாங்கள் பாராட்டுகிறோம்; ஆனால், அவர் எதிர்க்கட்சியில் சேர்ந்திருப்பதை நாங்கள் விரும்பவில்லை; அரசாங்கக்கட்சியிற்சேர்ந்து ஓர்தேசிய தலைவராக வேண்டுமென்றே நாங்கள் அவரை வேண்டுகின்றோம்" எனக் கூறியிருக்கின்றார்.

## வெங்காயம் ஏற்றிச்சென்ற லோறி

யாழ்ப்பாணத்திலிருந்து எழுபது மூடை வெங்காயம் ஏற்றிக்கொண்டு சென்ற வெள்ளிக்கிழமை கொழும்புக்குச் சென்ற லொறியொன்று அநுராசபுரம்-கண்டித் தெருவிலே கல்குளமைக்கும், திறப்பனைக்குமிடையில் பாதையைவிட்டுவிலகிப் பாரியதோர் பாலைமரமொன்றில் மோதியமையால் அதன் சாரதியான நாற்பதுவயதுடைய சண்முகம் என்பவர் லொறிக்குள் அகப்பட்டு நெரிந்து இறந்துபோயினர். லொறியும் பெருஞ்சேதத்திற்குள்ளாயிற்று.

## சீமெந்துத் தொழிற்சாலை

காங்கேசன்துறை அரசினர் சீமெந்துத்தொழிற்சாலையிலே சீமெந்து உற்பத்திச்செலவைக் குறைத்து அதிகமான சீமெந்து உற்பத்தி செய்யத்தக்கதாய் அதனைத் திருத்தி அமைப்பது பற்றி ஆலோசனைநடைபெற்று வருகிறது. இதுவிஷயமாய்ப் பாகிஸ்தானிலும், பிறநாடுகளிலும் தொழிற்சாலைகளை நிர்வகித்துநடத்தி மிகுந்தஅநுபவம் பெற்றவரான திரு. எ. டின்டால் என்பவர் அதன் புதியமனேஜராகத் தெரியப்பட்டிருக்கின்றார். அவர்வந்து கடமையாற்றத் தொடங்கியதும் குறைந்தசெலவிலே அதிகமான சீமெந்து உற்பத்தி நடைபெறத்தக்கதாகத் தொழிற்சாலை திருத்திஅமைக்கப்படுமெனத் தெரியவருகிறது.

## கமப்போட்டிப் பரிசு

தென்மராட்சியிலே அரசினர் நடத்திய கமப்போட்டியில் சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. சண்முகம் செல்லத்துரை என்பவருக்கு முதலாவது பரிசாக 200 ரூபாவும், நற்சாட்சிப்பத்திரமும் அளிக்கப்பட்டிருக்கின்றன. இவர் பயிர்ச்செய்கை நடத்திய ஐந்து ஏக்கர்காணியிலும் கோவா, பீட்றூட், கறட், போஞ்சி, உருளைக்கிழங்கு, வெண்டைக்காய், வாழைமுதலிய காய்கறிகளையும், கனிதரும் மரங்களையும் உண்டுபண்ணியிருந்தார். அப்போது உணவு-கமத்தொழில் மந்திரியாயிருந்த சேர் ஒலிவர் குணதிலக அவர்கள் இந்தக்காணியைப் பார்வையிட்டிருக்கின்றார்.

## தென்மராட்சியில் பருத்திச்செய்கை

தென்மராட்சிப்பகுதியிலுள்ள இருபத்திரண்டு கிராமங்களிலும் பருத்திச் செய்கையைவிருத்திபண்ணுமாறு அப்பகுதிக் கிராமஅதிகாரிகளும், காரியாதிகாரியும்,கிராமமுன்னேற்றசங்க அதிகாரிகளும்தீவிர முயற்சி எடுத்துவருகின்றார்கள். பனை, தென்னைமரங்களின் நிழலில் பருத்திச்செடியை உண்டுபண்ணினால் கோடைகாலத்திலே அதற்குத் தண்ணீர் தேவையில்லை என்றும், பருத்திச்செய்கையால் நல்லபலன் கிடைக்குமென்றும் கிராமமுன்னேற்ற சங்க மேற்பார்வை அதிகாரியான திரு. சி. சின்னத்தம்பி அவர்கள் பிரசாரஞ்செய்துவருகின்றார்.

## அரசாங்கக்கட்சியின் தீர்மானம்

கம்யூனிஸ்டுக்களும், அவர்களின் அநுதாபிகளும் சகல அரசாங்க உத்தியோக பதவிகளிலிருந்தும் நீக்கப்படவேண்டுமென்று சிபாரிசு செய்வதெனச் சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்ற அரசாங்க பாராளுமன்ற கட்சியின் நிர்வாகசபைக் கூட்டம் ஏகமனதாக முடிவு செய்திருக்கிறது. இன்னும் ஆஸ்பத்திரிகளுக்கும், சமூக சேவைகளுக்கும் வேண்டிய நிதிகளை அதிகரிக்கச் செய்வதற்காகத் தேசிய லொத்தரொன்று நடத்தப்படவேண்டுமென்றும் கமிற்றி வற்புறுத்தியுள்ளது. மேலும் கள், சாராயக் குத்தகைக்காரர்கள் இலங்கையர்களாகவே இருக்கவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

## ஐந்துமணிநேர வேலைஅல்ல

மாதம்பையைச்சேர்ந்த கல்முறுவாவிலே பெற்றார்-ஆசிரிய சங்கத்தால் கட்டி அரசாங்கத்துக்கு உதவப்பெற்ற பிரதமமத்தியபாடசாலைப் புதிய கட்டடத் திறப்புவிழாக் கூட்டத்திற்குச் சென்றவியாழக்கிழமை கல்விமந்திரியார் எம். டி. பண்டா அவர்கள் தலைமைவகித்துப் பேசியபோது: "தங்கள் உரிமைகளையும், கடமைகளையும் கிரகித்து விளங்கிக்கொள்ளும் நல்ல பிரசைகளாகத் தங்கள் மாணவர்களை ஆக்கிவைக்குமாறு ஆசிரியர்கள் தங்கள்சேவையை நாளொன்றுக்கு ஐந்து மணித்தியாலத்துடன் கட்டுப்படுத்திவிடப்படாது; ஆனால், பகலும் இரவுமாகப் பணியாற்றவேண்டும்" எனக் கூறலாயினர்.

## பயங்கர பஸ்விபத்து

ஸ்ரீலங்கா பஸ்கம்பெனியைச்சேர்ந்த சி. வி. 807 எனும் இலக்கமுள்ள பஸ் சென்றவியாழக்கிழமை சாயந்தரம் 4 மணியளவில் இறம்புக்கணையிலிருந்து பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு குருநாகலைநோக்கிச் சென்றபோது அதற்குச் சமீபமான செறுவகாலைவுமிடத்திலே அபாயகரமான வளைவொன்றில் பாதையைவிட்டு விலகிச்சென்று பன்னிருஅடித் தாழ்வில்விழுந்து குடைசாய்ந்து தீப்பற்றியமையால் அதிற் சென்ற பிரயாணிகளில் எட்டுப்பேர் தீயில்வாறுபெரிந்து அவ்விடத்திலேயே இறந்தனர். 13 பேர் எரிந்து படுகாயமடைந்து குருநாகல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டனர். இவர்களிலும் இருவர் பின்பு இறந்துபோயினர். அங்கு சிகிச்சைபெற்றுவரும் வேறு ஐவரின் நிலைமையும் கவலைக்கிடமாய் இருந்துவருகிறது. சாரதியையும், கண்டக்டரையும்சேர்த்து இந்தப்பஸ்ஸில் 25 பேர் பிரயாணஞ்செய்தனரெனத் தற்போது தெரியவருகிறது. உயிர்தப்பியவர்கள் பஸ்கண்டக்டரும், ஓர்கத்தோலிக்கபாடசாலை ஆசிரியரான பி. பி. குலரத்ன என்பவருமே. காயமடைந்தவர்களில் சாரதியும் ஒருவன்.

## மாதோட்டத் தபால்

(நாட்டுத்தூதன்)

ஐயா! கபடர்கள் ஒருசிலரின் மந்திர தந்திர வித்தைகளாலே ஒற்றுமையாக வாழ்ந்த சிலகிராமங்களில் ட்சிப்பிரிவும், கலவரமும் காணப்படுவது பெரிதும் மனோவேதனையைத் தருகின்றதாம். இவர்கள் எப்படித்தான் கரணமடித்தாலும் தற்காலம் கிராமவாசிகளை இலகுவில் அசைக்கமுடியாதாம் "இந்த விரட்டுக்கும்......" என்றபழமொழி போல் சிலகிராமவாசிகள் நடந்துகொள்வது மகிழ்வைத் தருகின்றதாம். வாய்ச் சம்பிரதாயமான பகட்டுவார்த்தைகளுக்கு அவர்கள் எடுபட்டகாலம் மலை ஏறிவிட்டது என்பதை இவர்கள் உணர்ந்து மரியாதையாக ஒதுங்குவதே உசிதமாகும். அப்போதுதான் நாடும் முன்னேற்றமடையும்.

காலபோக வேளாண்மை — "வரப்புயர" என்று ஔவையார் அப்போது வாழ்த்தியதுபோல, இப்போதும் மாதோட்டம் செழித்துச் செந்நெல் வளம்பெற்றுத் திகழவேண்டுமானல், கட்டுக்கரைக் குளத்தின் அணைக்கட்டு உயர்கஎன்றே கூச்சலிட வேண்டி இருக்கிறதாம். இம்முறை ஓளவுக்கு நல்லமழை பெய்துதான் இருக்கிறதாம். உழவர்களும் மகிழ்வோடு உழவுதொழிலை ஊக்கமாக நடத்தித்தான் வருகின்றனராம். கட்டுக்கரைத் தடாகத்திலும் தண்ணீர் கண்குளிரக் காட்சியும் அளிக்கிறதுதானும். ஆனல், மழை இருமாசங்களுக்குத் தொடர்ந்துபெய்யாவிடில்எல்லாம் மலடிவயிற்று மகவுபோல்தான் ஆகிவிடுமாம். ஏனெனில், கட்டுக்கரைக் குளத்தின்நிலை அதற்கெல்லாம் நல்லாயில்லையாம். விவசாயத்தை அதிகமாக விருத்திசெய்யுங்கோ! விருத்திசெய்யுங்கோ! என்று பலவினைவிதைகளையும் மடியிற்கட்டிக்கொண்டு, ஒருதொகையான உணவுஉற்பத்திஇயக்க உத்தியோகஸ்தர் ஓலமிட்டுக்கொண்டு ஒற்றைமாட்டு வண்டிகளிலும், மோட்டர்சைக்கிள்களிலும் ஊர்சுற்றி வருகின்றனரே அல்லாது கட்டுக்கரைக் குளத்தின் திருத்தத்தையிட்டுக் கதைப்பாரும், கவனிப்பாரும் கண்ணைப் படைத்துமே இல்லையாம்.

சவேரியார் கல்லூரி — மன்னர்ப் பட்டினத்தில் மட்டுமல்ல, மன்னர்ப் பகுதி முழுவதிலுமே அக்காலமுதல் சிறந்த கல்விக்கழகமாக விளங்கிவந்தது ஆர்ச். சவேரியார் கல்லூரியே. இப்போது அதன்நிலை கிறிஸ்ரியன் பிறதர்மாரின் சிறந்த கண்காணிப்பின் கீழ் அதிகமதிகம்விருத்தியடைந்துகொண்டு வருகின்றது. அதில்சேரும் பெருந்தொகை மாணவர்களுக்கு விடுதி வசதிஅளிப்பதற்காகப் புதிய கட்டடமொன்றை அமைப்பதற்கெனச் சமீபத்திலே மேற்றிராணியாண்டவர் அவர்களால் மாதா கோயில் வளவிலே அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. இன்னும் நாட்டுப்புற மாணவர்கள் அங்குசென்று படித்து வருதற்கான வசதியளிக்கும் நோக்கமாய் விசேஷ 'வான்' வாகனச்சேவையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. மாதோட்டப்பகுதி மாணவர்களுக்கு இது பேருபகாரமான ஓர்செயலாகும்.

சிலுவைக்கோயில் —உயிலங்குள விசாரணைப்பங்கிலே மன்னர்–மதவாச்சித் தெருவிலுள்ளதும், மன்னரிலிருந்து ஆறும் - ஏழாம் மைல்களுக்கிடையே இருப்பதுமான கள்ளிகட்டைக்காடு என்னும்கிராமத்தில் திருச்சிலுவைக்கோயிலென ஓர் சிற்றாலயம் இருக்கின்றது. கள்ளிமரங்களும், கட்டைப்புதர்களும் செறிந்தகாடாக முன்னர்இருந்தமையால் இதற்குக் கள்ளிகட்டைக்காடு எனும் காரணப்பெயர் உண்டானதுபோலும். இந்தக்கோயிலிலே வருடந்தோறும் வைகாசிமாதம் திருச்சிலுவை கண்டெடுத்த திருநாள் அதிபக்திச்சிறப்பாய்க் கொண்டாடப்பட்டு வருகிறது. அத்துடன் இடையிடையே திருச்சிலுவை கண்டெடுத்த சரிதையும் இவ்வூர்க் குருகுலகத்தோலிக்கரால் நாடகமாக நடித்துக்காண்பிக்கப்பட்டு வருகிறது. இன்னும் மாந்தையிலுள்ள புராதன செபமாலைமாதாவின் ஆலயத்திலிருந்த பரிசுத்த செபமாலைஇராக்கினியின் திருச்சுரூபத்தை வேதவிரோதிகளுக்குப் பயந்து சிறுதொகையினரான கத்தோலிக்கர் எடுத்துச்சென்றபோது இங்குவைத்திருந்துதான் பிறகு மருதமடுத்திருப்பதிக்குக் கொண்டுசென்றதாகத் தெரியவருகிறது. அப்போது மாந்தையிலிருந்து வன்னிகாட்டுக்கு இவ்வூர்வழியாக ஓர் ஒற்றடிப்பாதை இருந்திருக்க வேண்டுமென யூகிக்க இடமிருக்கிறது.

சுபம்!

## பெற்றோர்தின விழா

ஊற்றுவாயன்குளம், கத்தோலிக்க பாடசாலையின் பெற்றோர்தினவிழா 22-11-53 ஞாயிறுவாரம் மன்னர்–மாதோட்டப்பகுதி மூப்புச்சுவாமியார் அதிவண. எஸ். பீற்றர்அவர்களின் தலைமையில் ஆடம்பரமாகநடந்தேறியது. அதற்குப் பலபாடசாலைகளின் ஆசிரியர்களும், பெற்றோரும், மற்றோரும் திரளாகச் சமுகமளித்திருந்தனர். பிற்பகல் 3மணியளவில் விளையாட்டுப் போட்டி முடிபெய்தியதும் மாணவரின் பேச்சுப்போட்டி சிறப்பாக நடைபெற்றது. பின்னர் தலைமையாசிரியர் யோ. அருளப்புஅவர்களால் பாடசாலையின் வருடாந்தஅறிக்கை வாசிக்கப்பட்டுக் கனம். வித்தியாதரிசியவர்களால் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. கூடியவெற்றிகள்பெற்ற சூரியகழகத்திற்குச் சூரியகட்டைக்காட்டுச் சுபோன்மாஸ்றரின் அன்பளிப்பாகிய வெள்ளிக்கிண்ணம் வழங்கப்பட்டது.

வித்தியாதரிசியவர்கள் பேசியபோது; பாடசாலையின் வளர்ச்சிக்கும், அது உறுதியானபதிவைப் பெறுதற்கும் காரணம் ஆசிரியரின் அயராஉழைப்பே என்றும், அவருக்குப் பெற்றோரின்உதவியும், ஒத்துழைப்பும் என்றுமே இருந்துவரவேண்டுமென்றும், பெற்றோர் தங்கள் தொழிலுக்கு உதவியாக மாணவரை வீட்டிலே தடைசெய்யாது கல்வியிலே கவனஞ்செலுத்தி அவர்களைப் பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்பிவைக்க வேண்டுமென்றும், உயர்தரபடிப்பிற்குப் பிள்ளைகளை அனுப்பவேண்டுமாயின் மன்னர் சென்சேவியர்கல்லூரிக்குப் பிள்ளைகளைக் கொண்டுசெல்லப் பஸ்வசதி ஒழுங்குசெய்திருக்கிறார்களென்றும் அதிகம்விரிவாகப் பிள்ளைகளின் வருங்காலக் கல்வியைப்பற்றிக் குறிப்பிட்டுப் பாடசாலைத் தோட்டவருமானத்தைத் தலைமையாசிரியர் மாணவர்களிடையே பங்கிடுசெய்து சேமவங்கியிலே பணம்போட்டுவைத்திருப்பதைப் பாராட்டிநின்றார்.

ஆசிரியர் வி. ஆர். டோமினிக், வி. எஸ். திருச்செல்வம்ஆகியோர் பேசியபின் தலைவர்சுவாமியவர்கள் எழுந்து: பாடசாலைஆரம்பமாகிப் பல்லாண்டுகள் சென்றும் அது உறுதியானபதிவுஇல்லாத பாடசாலையாக இருக்கக்கண்டு ஊக்கங்கொண்டுழைத்து அதைஉறுதியானதாக்கியபெருமை உங்கள்மத்தியில் தொண்டாற்றிவரும் தலைமையாசிரியருக்கே உரியதாகும்; ஆதலால் பெற்றோரெல்லாம் அவர்மட்டில் என்றும் நன்றியுள்ளவர்களாய் இருப்பதோடு, அவர்நல்லசுகதேகியாய்ப் பல்லாண்டு உங்கள்பாடசாலையில் தொண்டாற்றச்செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்துவர வேண்டும்; சன்மார்க்க கல்வியே பிற்காலத்தில் பிள்ளைகளை மனுஷராக்கும்; அதற்கு இவ்வித பாடசாலைகளே முக்கியமானவைகள்; தக்ககாலத்தில் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி அவர்கள் கல்வியில வைக்க வேண்டும்; பெற்றோர் அனுவசியமாகப் பிள்ளைகளைத் தடைசெய்யாது ஆசிரியருடன் ஒத்துழைத்துக் கல்வியிலே அவர்களைக் கருத்தாக வளர்த்துவர வேண்டுமெனப் பேசினர். ஈற்றில், பிள்ளைகளின் அபிநயப்பாவும், கோலாட்டம், கும்மி, நடனம் ஆகியனவும் சிறப்பாக நடைபெற்றுத் தலைமையாசிரியரின் நன்றியுரையுடன் விழா இனிதே முடிவுற்றது.

—நிருபர்

## தேம்பாவணியும் செபமாலையும்

### களிகூர்ந்தகாரணிக்கம்

### 2-ம் காரணிக்கம் — 8-ம் பிரியதத்தம்

### 18. தேவனின் மாறுதநீதி

வேதாகமத்திலுள்ள வாக்கியங்களின் உட்பொருள்கள் எலலாம் சாதாரண மக்களுக்குப் புலனுவதில்லை. அவற்றில் மறைபொருளாக அநேகம் சொல்லப்பட்டிருக்கின்றன. இஸ்பிரீத்துசாந்துவின் விசேஷஅருள்பெற்ற கன்னிகையோ அவற்றின் நுட்பமான பொருள்களைஎல்லாம நன்கறிந்திருந்தாள். அத்தேவவாக்கியங்கள் நிறைவேறக்கண்ட கன்னிகை அளவில்லா மகிழ்வுகொண்டு மானிடசந்ததியின் சார்பாக அப்போது நன்றிதெரிவித்துத் தனது தேவதோத்திரப்பாடலைத் தொடர்ந்து பாடுகின்றாள்.

"கேழ்வார் தடக்கை வலிகாட்டிக்
கிளர்தி உணர்விற் செருக்குகின்றான்
சூழ்வார் சிதைத்தான்.........."

ஆண்டவன் எக்காலத்தும் விளங்கிய தனதுதடக்கையின் (விசாலமானகையின்) திறத்தைக்காட்ட நடத்தின நீதிமுறை எங்ஙனமெனில், நிவினை உணர்ந்து மனதில்அகங்காரத்தை நினைத்தவரை அழித்தான்.

(அவர் தம்முடையகரத்தின் வல்லமையைக் காட்டியருளினர். இருதய சிந்தனைகளில் கர்வமுடையவர்களைச் சிதறடித்தார்.)

"..................வயத்துயர்ந்தோர்
அகள்செய் வெப்பின் தாக்குகின்றான்"

வல்லமை (வயம்) உள்ளவர்களை அவர்கள்செய்த பாவத்தால் (அகள்) உயர்ந்த இடத்திலிருந்து (வெப்பின்) வீழத்தள்ளினன் (தாக்குதல்)

(வல்லமைஉள்ளவர்களை ஆசனத்தினின்றும் தள்ளினர்.)

"தாழ்வார் உயர்த்தான்................"

அறத்தைப் பற்றித் தாழ்ந்தவரை உயர்த்தினன்.

(தாழ்ந்தவர்களை உயர்த்தினர்)

".......................பசித்தயர்வார்
சால நிறைத்தான்.........."

பசித்து மெலிந்தவரை மிகுதியும் நிரப்பினன்.

(பசித்திருக்கிறவர்களை நன்மைகளால் நிரப்பினர்.)

"..............................திருமல்கி
வாழ்வார் வறியோர் ஆக்குகின்றான்"

பொருட்செல்வம் ஒன்றினை நாடிப் பெருமையாய் வாழ்பவரைத் தரித்திரராக்கினன்.

(தனவான்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்)

கேழ்வார் தடக்கை வலிகாட்டிக்
கிளர்தி உணர்விற் செருக்குகின்றான்
சூழ்வார் சிதைத்தான் வயத்துயர்ந்தோர்,
அகள்செய் வெப்பின் தாக்குகின்றான்
தாழ்வார் உயர்த்தான் பசித்தயர்வார்.
சால நிறைத்தான் திருமல்கி
வாழ்வார் வறியர் ஆக்குகின்றான்
மாறு நீதி வயமிக்கோன்.

பாக்கியவதியாகிய அன்னை சர்வேசுரனது கோணுதநீதியையும், குறையாத இரக்கத்தையும் விளக்கிக்காட்டுகிறாள். தேவவல்லமையானது அகங்காரிகளைச் சிதறடித்தது. வல்லமைபடைத்தவர்களை அவர்கள் சிம்மாசனங்களிலிருந்து விழுத்தியது. செல்வர்களைத் தூரத்தித் தரித்திரராக்கியதுஎன்று பாடுகிறாள் அல்லவா? இங்ஙனமாக, அவள் எதைக்குறித்துப் பாடுகின்றாள்? அதன் உட்பொருள் எதுவாய்இருக்கலாம்?

தேவதாயார் பாடிய இந்தக்கீதத்தில் அடங்கியுள்ள அரியகருத்துக்களை வேதசாஸ்திரிகள் மிகவும்அழகாக விளக்கிக் காட்டுகிறார்கள்.

சர்வேசுரன் மனிதரை உண்டாக்குவதற்குமுன் அரூபிகளான சம்மனசுகளைச் சிருட்டித்தார்அல்லவா? அங்ஙனம் சிருட்டிக்கப்பட்ட சம்மனசுகளை ஆண்டவர் பரீட்சித்துப்பார்க்க விரும்பினர். அதனல் தமது திவ்வியகுமாரன் பின்னெருகாலத்தில் தரிக்கவிருந்த மனிதஅவதாரத்தைப்பற்றி அவர்களுக்குத்தெரிவித்து, அச்சுபாவத்தைத் தரிக்கப்போகிறவரை ஆராதிக்கும்படி கட்டளையிட்டார்.

அகங்காரம்கொண்ட லூசிப்பேரும், அவனதுகூட்டாளிகளிற்சிலரும் மனிதரூபமாகக் காட்டப்பட்ட சுதனனவரை ஆராதிக்க மறுத்துநின்றனர். சம்மனசுகளாகிய தங்கள்சுபாவத்தின் மகிமையை உணர்ந்தஅவர்கள் ஈனச்சுபாவமாகிய மனிதசுபாவத்தை அவமதித்தார்கள். ஆனல், தேவன் மனிதஅவதாரஞ் செய்தபோதிலும் தமது தேவசுபாவத்தை இழந்துபோக மாட்டாரென்றஉண்மை அவர்களின் மூடப்புத்திக்குப் புலனகவில்லை. இவ்வாறு கர்வங்கொண்ட அவர்களைச் சர்வேசுரன் அக்கணத்திலேதானே நரகபாதாளத்திற் தள்ளிவிட்டார். செல்வர்களாய்இருந்த அவர்கள் சர்வேசுரனை என்றும்காணமல் இருப்பதாகிய வறுமைத்தனத்திற்கும், கொடும்பசிக்கும் உள்ளானுர்கள். தெய்வநீதி அத்தகையது.

பண்டிதர், C. செல்வரத்தினம்

— 12-ம் பத்திநாதர் பாப்பாசரின் ஞாபகார்த்தமாக அவரின் அனுமதியோடு அமெரிக்கஐக்கியதேச சென்லுயிஸ்நகரிலுள்ள சென் லூயிஸ்சர்வகலாசாலையிலே 20 லட்சம்பவுணசெலவிட்டுப் பாரிய நூல்நிலையமொன்று அமைக்கப்படவிருக்கிறது இதிலே வத்திக்கான் நூல்நிலையத்தில் படம்பிடித்தெடுத்த விலைமதித்தற்கரிய ஆறுலட்சம் கையெழுத்து நூல்களும் அடங்கியிருக்கும்.

— நாலாயிரம் வருடங்களுக்குமுன் இயற்றப்பட்ட ஒருவைத்தியநூல் 50 வருடங்களுக்குமுன் ஈறுக்கிலே கண்டெடுக்கப்பட்டது. இது சுமேரியமொழியில் களிமண்பலகைமீது வரையப்பட்டிருந்தது. அமெரிக்காவிலுள்ள பன்மொழிவல்லுநர்பலர் சேர்ந்துபதின்மூன்று வருடங்கள்உழைத்ததின் பயனுக இந்தநூல்முழுவதும இப்பொழுது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

— எழுபதுவயதுடையவரான திரு. ஜான்டீயுள் என்பவரும், அவர்பாரியாரும் ஒல்லாந்திலே செய்ஸ்றஎனும் இடத்திலிருந்து 1,250 மைல் கால்நடையாகநடந்து சமீபத்திலே றோமாபுரிபோய்ச் சேர்லாயினர், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, இத்தாலி எனும் மூன்று நாடுகளினூடாகத் தங்கள் பிரயாணத்தை நடத்திமுடிக்க இவர்களுக்கு 107 நாள் பிடித்தது.

# புதிய பெத்லகேம் நட்சத்திரம்

பாத்திமா பதியிலே கட்டியெழுப்பப்பெற்றுள்ள பசிலிக்காஎனும் மகாலயத்தில் செபமாலையின் பதினைந்து பரமஇரகசியங்களையுங் குறிக்கும் பதினைந்து பீடங்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு மேற்றிராணியார் சமீபத்திலே அபிஷேகஞ்செய்தார். லிஸ்பன்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல்செறெஜெய்ரு ஆண்டவர் நடுப்பீடத்தை அபிஷேகம்செய்தார். இப்பீடமானது தேவமாதா விண்ணுலகஅரசியாக முடிசூட்டப்பெற்றதைக்குறிப்பதாகும். பாத்திமா ஆலயத்தைக் கொண்டுள்ள லியீரேநகர் மேற்றிராணியார் 82வயதுடையவராய் உடல்நலங்குன்றியிருந்தபோதிலும் இத்திருவைபவத்தில் கலந்து, தேவமாதா மங்களவார்த்தை சொல்லப்பெற்றதைக் குறிக்கும்பீடத்தை அபிஷேகம்செய்தார். மாதாவின் காட்சிபெற்ற மூன்று பிள்ளைகளில் ஒருவனுகிய பிரான்சிஸின்மேனி இப்பீடத்திற்கடியில்தான் அடக்கம்செய்யப் பட்டுள்ளது. கருதினல் செறெஜெய்ரு ஆண்டவர் நிறைவேற்றிய பெரிய பாடற்பூசையின்போது நிகழ்த்தியபிரசங்கத்திலே: "பெரும் போர்களால் நொந்துவாடி, மதிமயங்கிக்கிடக்கும் மனுக்குலத்திற்குப் பாத்திமா ஒருபுதிய பெத்லகேம் நட்சத்திரமாக விளங்குகிறது; அது சமாதானத்தைக் கண்டடையக்கூடியவழியை மனுமக்களுக்குக் காட்டுகிறது; மாதாவின் அமலோற்பவஇருதயம் நமதுமீட்புக்கு ஒருகேடயத்தையும் தந்துள்ளது; அதுதான் செபமாலை என்றுகூறினர். அபிஷேகதிருச்சடங்கிற்குப் போர்த்துக்காலின் மேற்றிராணிமார்களில் இரண்டொருவர்தவிர எல்லோரும் பாத்திமாவிலே கூடியிருந்தகாலையில் கருதினல் விசின்ஸ்கி ஆண்டவர்கைதுசெய்யப் பட்டதைஆட்சேபித்துப் போலாந்த அரசாங்கத்துக்கு ஒருதந்தி அனுப்பப்பட்டது.

## ஸ்பானிய பரிசுத்தவருடம்

அடுத்தபுதுவருடப்பிறப்புக்கு முதனுள் ஸ்பானியதேச சந்தியாகப்பரின் கம்பொஸ்ரெல்லா நகரிலே ஆரம்பமாகவிருக்கின்ற பரிசுத்தவருட யூபிலி விழாக் கொண்டாட்டத்திற்குப் பாப்பரசின் தூதுக்கோஷ்டி ஒன்றை அனுப்பிவைப்பதாகப் பரிசுத்தபிதா வாக்குப்பண்ணியிருக்கின்றார். இப்பரிசுத்தவருடம் மரியாயின் அல்லது "சிறிய பரிசுத்தவருட"த்துடன் ஏககாலத்தில் நிகழவிருக்கின்றது. அவ்வருடத்தில் அங்குஏறக்குறையப் பத்துலட்சம்யாத்திரிகர்கள் வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. சந்தியாகோநகர் அதிமேற்றிராணியாரான கருதினல்குய்ரோகா ஆண்டவரே ஓர் பரிசுத்தவருடத்தில் ரோமாபுரியிலே பரிசுத்தபாப்பரசரால் வழமையாகநடத்தப்படும் திருச்சடங்குகளையெல்லாம் அங்கு நடத்திவைப்பார்.

## சர்வதேச சற்பிரசாத மகாநாடு

அடுத்த சர்வதேச சற்பிரசாத மகாநாடு நடந்தேறும்போது உலகமுழுவதிலும் மகாஅழகுவாய்ந்த துறைமுகங்களில் ஒன்று, சகல சாதிகளையுஞ் சேர்ந்த யாத்திரிகர்களைக் கொண்ட மிதக்கும்ஹொட்ரேல்கள் பல நங்கூரமிட்டுநிற்கும் காட்சியளிக்க விருக்கின்றது. இது குவான்பாரு குடாக்கடலாகும். இதிற்றான் பிறேசில்நாட்டின் தலைப்பட்டணமாகிய றையோ டி ஜனேய்ரோநகர் இருக்கின்றது. 36-வது சர்வதேச சற்பிரசாதமகாநாடு அந்நகரில்தான் 1955-ம்ஆண்டுஆடிமாதம் நடந்தேறவிருக்கின்றது. இந்த மகாநாடுவெற்றிகரமாகநடந்தேறும்படியாக மன்றுடிக்கொள்ளுமாறு உலகமுழுவதிலுமுள்ள கத்தோலிக்க மக்களுக்கும் — விசேஷமாய் முந்தியசற்பிரசாத மகாநாடுகள்நிகழ்ந்த 35நகரங்களுக்கும் மனுச்செய்யப்பட்டிருக்கிறது. அவற்றில் லண்டன், டப்ளின் நகரங்களும் அடங்குவனவாகும்.

## ஒற்றைக்காலரின் திருயாத்திரை

பரீஸ்நகருக்குச் சமீபமான பிறெசோலெஸ்எனும் இடத்தைச்சேர்ந்த 29 வயதுடைய காஸ்ரன் மோர்செல்எனும் பிரான்சியர் தான்செய்துகொண்ட ஓர்நேர்த்தியின்பேரிலே பரீஸ்நகரிலிருந்து சென்ற புரட்டாசிமாதம் 3-ம் திகதியன்று கால்நடையாக யாத்திரைபுறப்பட்டுச் சமீபத்திலே ரோமாபுரிபோய்ச் சேர்ந்திருக்கின்றார். ஒற்றைக்காலரான இவர் கக்கதண்டங்களின் உதவியோடு நாள்ஒன்றுக்கு 9 முதல் 12 மைல்வரையில்நடந்து இந்த யாத்திரையை முடிக்கலாயினர். இந்து–சீனவிலே கம்யூனிஸ்த கலககாரரை எதிர்த்துப்போராடியபோது இவர் ஒருகாலை இழந்துபோயினர். இவர் அடைந்த காயங்களினிமித்தம் 32 முறைசத்திரவைத்தியம்செய்யப்பெற்றார். நேர்த்தியின்பேரிலேஇவர் தனதுயாத்திரையைத் தொடக்கியபோது சட்டைச்சாக்கில் ஒரேயொருபிராங்மாத்திரம் வைத்திருந்தார்.

# நான் பெருமை அடைகிறேன்

போலாந்திலே அதிகாரத்தைக்கைப்பற்றிய கம்யூனிஸ்தர்கள் அங்கு கத்தோலிக்கசமயத்தை அழித்துவிடுமாறு பலவழியாலும் முயன்றுவருகின்றார்கள். ஆனல், பலநூற்றூண்டுகளாக விசுவாசத்தில உறுதியாகநின்ற போலிஷ்மக்கள் எத்தகையகெடுபிடிக்கும் அஞ்சாது தங்கள்வேதத்தைப் பாதுகாத்து வருகின்றார்கள். அவர்களின் திடவிசுவாசத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக ஒருவயோதிபமாதின் வீரமொழிகளை ஈண்டுதருகிறோம்:— "வேதத்திற்காகத் துன்புறுத்தப்படும் குடும்பத்தினருள் ஒருத்தியாக நான் இருப்பதுபற்றிப் பெருமை அடைகிறேன். நாங்கள் சுதந்திரமாக எங்கள்வீடுகளிலே வாழ்ந்துவந்தபோது இருந்ததைவிடச் சிறைச்சாலை இரும்புக்கம்பிகளின் பின்னல் இன்னும்பெரிய மனிதர்கள் ஆகியுள்ளோம். விசுவாச உறுதியும், அஞ்சாநெஞ்சமும் படைத்த ஆயிரமாயிரம்மக்களைத் திருச்சபை கொண்டிருப்பதைப்பற்றி நான் பெருமைஅடைகிறேன். கம்யூனிஸ்தஅரசாங்கம் எங்கள் சுதந்திரத்தைத்தான் பறிக்கமுடியுமேயொழிய வேதசாட்சிமுடியை அதனுல் பறிக்கமுடியாது. போலாந்த திருச்சபையின் வருங்காலத்தைப் பற்றி எனக்கு முழுநம்பிக்கையுண்டு. வேதவிரோதிகள் ஒருவர்பின் ஒருவராக மறைந்தொழிகின்றனர். திருச்சபையோ அழியாமல் என்றும் நிலைத்துநிற்கின்றது. எனது வாழ்க்கையின் கடைசிகாலத்தைத் திருச்சபையின்வெற்றிக்காகத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கிறேன்."

## மரந்தறித்த குருவானவர்

சீனவைக் கம்யூனிஸ்தர்கள் அடிப்படுத்திய பின்னர் மலைகளிலே மரந்தறிப்போராக வேலைசெய்துவந்த ஓர் பெல்ஜிய குருவானவர் வண. ஹென்றி பியெற்ரோ சுவாமியார் அங்குரியென்சின் நகரிலிருந்து கடல்மார்க்கமாகச் சமீபத்திலே ஹொங்கோங்போய்ச் சேர்ந்திருக்கின்றார். தற்போது 52 வயதுடையவரான சுவாமியார் இற்றைக்கு 26 வருடங்களின் முன்னே பெல்ஜியதேச பிறசெல்ஸ் நகரிலிருந்து சீனவுக்குச் சென்றிருந்தார். பாவசங்கீர்த்தனம் கேளாமலும், தேவதிரவியானுமானங்கள் எதையும் பிரசித்தமாக நிறைவேற்றுமலும் கம்யூனிஸ்தர்கள் இவரைத் தடுத்தபோதிலும், அவர் நாள்தோறும் திவ்வியபூசை நிறைவேற்றக்கூடியவராய் இருந்தார். சனங்களும் திரளாகச்சென்று பூசைகண்டு வந்தார்கள்.

❋

## அரசாங்கத்தின் நன்றி

இந்திய உபஜனுதிபதியாகிய திரு. சார்வேபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்கள் புதியடில்லி நகரிலே அமெரிக்க வைத்தியமிஷன் கன்னியாஸ்திரிமாரின் புதியஆஸ்பத்திரியைத் திறந்துவைத்துப்பேசியபோது, இந்தக் கன்னியாஸ்திரிமார் ஆற்றிவருகின்ற "மகத்தான பிறர்சிநேகத்தொண்டை"யிட்டு இந்திய அரசாங்கத்தினதும், இந்திய மக்களினதும் "மட்டிலடங்காத நன்றியை"த் தெரிவித்துக்கொண்டார். "ஆயிரக்கணக்கானமைல் தூரத்திற்கப்பாலிருந்துவந்து இத்தேசத்திலுள்ள மக்களின் சேவைக்கென்று தங்களை அர்ப்பணஞ்செய்துள்ள இந்தக்கன்னியாஸ்திரிமாரையிட்டு நான் மிகுந்த பிரமிப் படைகின்றேன்" என்றும் அவர் கூறலாயினர்.

❋

## பாப்பரசரின் மூன்றுவதுதரிசனை

மரியாயின்வருடத்தை ஆரம்பித்துவைக்குமாறு பரிசுத்த பாப்பரசர் சென்ற 8-ந் திகதி செவ்வாய்க்கிழமை ரோமாபுரியிலுள்ள மேரிமஜோர் மகாலயத்திற்குச் சென்றூர் அல்லவா? அவர்பாப்பானவராகவந்தபின் அம்மகாலயத்திற்கு அளித்த மூன்ருவதுதரிசனையும், அவரது முதற்தரிசனையின் பதினன்காவதுநிறைவுதினமும் இதுவாகும். குருப்பட்டம் பெற்றபின் அம்மகாலயத்தில் தாமநிறைவேற்றிய முதலாவதுதிவ்வியபூசைப் பலியின் நாற்பதாம்ஆண்டு நிறைவுவிழாவை ஞாபகப்படுத்துமாறு அவர் 1939-ம் ஆண்டு மார்கழிமாதம் 8-ந் திகதியன்று முதன்முறையாக அதனைத்தரிசித்தார். 1950-ம்ஆண்டு யூபிலியிப்பலனை அடைவதற்காக ரோமாபுரியிலுள்ள நான்குபிரதம மகாலயங்களையும் சந்தித்தபோது இரண்டாம்முறையாக அதனைத் தரிசிக்கலாயினர்.

# மூவாயிரவரில் முன்னூறு பேரே

சோவியற்ருஷியா அடிப்படுத்திக்கொண்ட பால்திக்நாடுகளில் ஒன்றுகிய கத்தோலிக்க லிதுவானியாவிலே அப்போது 3,000 குருமார்வரை இருந்தவிடத்தில் தற்போது 300 குருமார்மாத்திரமே எஞ்சியிருந்து அந்தரங்கமாகத் திருத்தொண்டாற்றி வருகின்றார்கள். சமீபத்திலே அந்நாட்டிலிருந்து தப்பிவெளிகொண்ட அகதிஒருவர் ஜேர்மன் கத்தோலிக்கசெய்திஸ்தாபனத்துக்குத்தெரிவித்துள்ளதுவருமாறு: அங்கேஎப்போதாவது ஓர் இடத்தில் திவ்வியபூசை நிறைவேறும்போது, கம்யூனிஸ்த ஆட்சியின் பயமுறுத்தலையும் பாராமல் பண்ணைத சூழவரவுள்ள பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான கத்தோலிக்கர்வந்து அதைக்காணுகிறார்கள்; ஆனல், குருமாரின்தொகை குறைந்துகொண்டுவருகிறது; தங்கள் பிள்ளைகள் மார்க்ஸியவாதத்திலே பயிற்றப்பட்டுவருவதையிட்டு அங்குகத்தோலிக்கர் பெரிதும்கவலை கொள்ளுகின்றார்கள்; ஆயிரம்குருமார்உட்பட ஐந்துலட்சம் பேருக்குமேற்பட்ட லிதுவானியர்கள் சோவியற்ருஷியாவில் வேலைசெய்ய அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்நாட்டிலுள்ள 1,200 கத்தோலிக்க கோவில்களில் அதிகப்பற்றனவை இப்போது தியேற்றர்களாக, அன்றேல் பொழுதுபோக்கு நிலையங்களாக மாற்றப்பட்டும், பிரிவினைச் சபைக்குக் கையளிக்கப்பட்டுமிருக்கின்றன.

### மார்கழி மாதம்

போதுக்கருத்து:— பரிசுத்தஸ்தானத்தின் சமாதான முயற்சிகள் அனுகூலமடையும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன் கருத்து:— யப்பானில் திருச்சபை நன்கு அறியப்படும்படி மன்றாடுவது.

சத்தியவேத
# பாதுகாவலன்
1953-ம் ஆண்டு
மார்கழி மாதம் 10-ந் திகதி

## மரியாயின் வருடம்

இஃது மரியாயின் யுகமெனப் பெருமைபாராட்டி அழைக்கப்படுகிறது. இந்த மரியாயின் யுகத்திலே பரிசுத்தபாப்பரசர் செய்துள்ள ஓர் பிரகடனத்தாலே "மரியாயின் வருடம்" ஒன்றைக்காணும் விசேஷ உரிமையை நாம் பெற்றிருக்கின்றோம். பரிசுத்த தேவதாயாரின் அமலோற்பவம்—அதாவது அவர் மாசில்லாமல் உற்பவித்தாரென்பது ஓர் விசுவாசசத்தியமாகப் பிரகடனஞ் செய்யப்பெற்ற இந்த நூற்றாண்டு விழாவைத் தக்கமேரையாய், பயபக்தியாய்க் கொண்டாடும்படியாகப் பரிசுத்தபாப்பரசர் சாதாரண நிருபம்ஒன்றிலும், நம்மேற்றிராணியாண்டவர் மேய்ப்பர்நிருபம்ஒன்றிலும் நம்மை அழைத்திருக்கிறார்கள். இந்த மகத்தான விழாக் கொண்டாட்டத்திலே கத்தோலிக்க உலகமுழுவதும் கலந்துகொள்ள விருக்கின்றது. இலங்கைக் கததோலிக்கமக்கள் தத்தம் மேற்றிராணிமார் வகுத்துள்ள திட்டப்படி இந்தவிழாவைக் கொண்டாடுவார்கள்.

அன்று ஒன்பதாம் பத்திநாத பாப்பானவர் தேவதாயாரின் அமலோற்பவ விசுவாச சத்தியத்தைப் பிரகடனஞ் செய்தபோது, தமதுஉள்ளத்தில் பெரிதும் மனேவருட்சி கொண்டவராய், "நமக்கு அத்தனை அருமையான கத்தோலிக்க திருச்சபையின் மக்கள் எல்லாரும் நமதுவார்த்தைகளுக்குச் செவிசாய்த்து, என்றுமில்லாத மிக்க பக்தி வைராக்கியத்துடனும், வணக்க பற்றுதலுடனும் சென்மபாவ மாசுமறுவில்லாமல் உற்பவித்த கன்னிமரியம்மாளாகிய மகாபரிசுத்த தேவதாயாரை மகிமைப்படுத்துவார்களாக! அவரை இரந்து மன்றடுவார்களாக! நமக்குவேண்டிய சகாயங்களை அவரிடம் பரிந்துகேட்பார்களாக!" என்று மனுப்பண்ணிக்கொண்டார். இது நிகழ்ந்தது 1854-ம் ஆண்டு மார்கழி மாதம் 8-ந் திகதியாகும். அன்றுமுதல் இந்தயுகம் மரியாயின் யுகமாகத் திகழுகிறதெனலாம். லூர்துபதியிலும், பாத்திமாபதியிலும், மற்றும் பலவிடங்களிலும் அவர்காட்சியளித்து நமது காலப் பெருங்கெடுதிகளிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிவகைகளையெல்லாம் தெரிவித்திருக்கின்றார்.

உலகம் இன்று அமைதியற்று, திரைகடல்போன்று கலங்கிக் கொண்டிருக்கின்றது. சமாதானத்தைக் கண்டடையும் வழிதுறையைக் கண்டுகொள்ளாது கரைதுறைகாணக் கப்பலைப் போன்று தயங்கிக்கொண்டிருக்கின்றது. மனிதகுலத்தை மனிதகுலமே குழிதோண்டிப் புதைத்துக்கொண்டிருக்கிறது. தனது சிருட்டிகர்த்தாவைக் கைநெகிழ்ந்து உலகமேசதமென்ற லோகாயதக் கொள்கையை நிலைநாட்டப்பார்க்கின்றது. இந்தநிலைமையிலே மரியாயின்வருடம் உதயமாகியிருக்கின்றது. பரிசுத்த பாப்பரசர் சென்ற 8-ந் திகதியன்று மரியாயின்வருட ஆரம்ப விழாவை நடாத்திவைத்து, அவ்வேளைக்கெனத் தாமாகவே ஆக்கியருளிய செபத்திலே, சகல மானிடரும் தங்கள் சகோதரத்துவத்தையும், சகல சாதியினரும் தாங்கள் ஒரேகுடும்பத்தையே சேர்ந்தவர்களென்பதையும் உய்த்துணரச்செய்யுமாறு தேவதாயாரை வேண்டிநின்றார். இந்தச்செபம் உண்மையான பொதுச்சமாதானத்தைத் தந்தருளும்படியாகத் தேவ தாயார் மனுப்பேச வேண்டுமென அவரை இரந்து கேட்பதாகும். ஆகவே, மரியாயின் வருடத்தை நாமெல்லாம் பயன்படுத்தி அதனல் நமக்கும், பொதுஉலகத்துக்கும் நன்மையாக்கவேண்டியது நமதுகடனாகும். அதனல், இப்புனிதவருடத்தில்வரும் ஒவ்வோர்மாதமும் மாதாவின் ஒவ்வோர் வணக்கமாதமாய், ஒவ்வோர்வாரமும், ஒவ்வோர் நாளும் மாதாவின் வாரமும், மாதாவின் நாளுமாய் இருக்குமானல் இஃது நமக்கோர் பாக்கியமானவருடமாய் இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

## ஆகமன கால 3-ம் ஞாயிறு

(சுவிசேஷ வாசிப்பு)

(அரு. 1: 19--28)

அர்ச். யுவானியார் எழுதிவைத்தபடி பரிசுத்த சுவிசேஷத்தின் தொடர்ச்சி:— அந்தக் காலத்திலே யூதர்கள் யெருசலேமிலிருந்து ஆசாரியரையும் லேவித்தரையும் அருளப்பரிடத்தில் அனுப்பி: நீர்யார் என்று கேட்டபோது, அவர் சொன்ன சாட்சியமாவது: நான் கிறீஸ்துவானவர் அல்ல என்று அறிக்கையிட்டு, அதை மறுதலிக்காமல் வெளிப்படுத்தினர். அவர்கள்மறுபடியும் அவரைவினவி: பின்னைநீர்யார்? நீர் எலியாசோ என்று கேட்க, அவர்: நான் அவர்அல்ல என்றார். நீர் தீர்க்கதரிசியோஎன, அதற்கும் அவர்: நான் அல்ல என்று மறுமொழி சொன்னர். ஆகையால் அவர்கள்: எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள் மாறுத்தாரம் சொல்லும்படி நீர் யார்? உம்மைக் குறித்து என்னசொல்லுகிறீர்? என்றார்கள். அதற்கு அவர்: கர்த்தருடைய வழியைச் செவ்வையாக்குங்கள் என்று இசையாஸ்தீர்க்கதரிசிவசனித்தபடியே வனந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய குரலொலி நானே என்றார். அனுப்பப் பட்டவர்களோ பரிசேயராயிருந்தார்கள். மீளவும் அவர்கள் அவரை நோக்கி: நீர் கிறீஸ்துவுமல்ல, எலியாசுமல்ல, தீர்க்கதரிசியுமல்லவென்றல், பின்னை ஏன் ஞானஸ்நானங் கொடுக்கிறீர்? என்று கேட்டார்கள். அருளப்பர் அவர்களுக்கு மாறுத்தரமாக: நான்சலத்தினல் ஞானஸ்நானங் கொடுக்கிறேன். ஆனல், நீங்கள் அறியாத ஒருவர் உங்கள் மத்தியில் நிற்கிறார். எனக்குப் பின் வரவேண்டியவரும், என்னிலும் மேன்மையாக்கப்பட்டவரும் அவரே; அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கு நான் பாத்திரவான் அல்ல என்றார். இவைகள் யோர்தான் நதிக்கு அக்கரையில் அருளப்பர் ஞானஸ்நானங் கொடுத்துவந்த பெத்தானியாவில் சம்பவித்தன.



## சதாசகாயமாதா கோணம்

புரேட்டஸ்தாந்தரின்

## "பிரியதத்த மந்திரம்"

(முன்தொடர்ச்சி)

### சகோதரி மனந்திரும்பல்

அவர் மனந்திரும்பிக் கொஞ்சக்காலத்தின்பின், அவர் விவாகம் செய்திருந்த தமது சகோதரியைச் சந்திக்க நேர்ந்தது. அவள் அவரைப்பார்த்துக் கோபத்துடன் கூறுவாள்: "நான் எனது பிள்ளைகளை எவ்வளவாக நேசிக்கிறேனென்று நீ அறியமாட்டாய்; அவர்களில்எவனுவது கத்தோலிக்கனுக விருப்பங்காட்டினல், அவர்கள் பாப்புமதத்தைத் தழுவுவதைக் காண்பதிலும் அவர்களை என்சொந்தக்கையால் கொலைசெய்யத் தயங்கமாட்டேன்."

அர்ச். சின்னப்பர் மனந்திரும்புமுன் கத்தோலிக்க சமயத்தின்மட்டில் எவ்வளவு கோபாவேசமும், துவேஷமுங் கொண்டிருந்தாரோ அதேபோல அவளின் மனப்பான்மையிருந்தது. அர்ச். சின்னப்பர் தமது வழிகளை எவ்விதம் மாற்றிக்கொண்டாரோ அப்படியே அவளும் மாற்றிக்கொள்ளத் தேவன் சித்தங்கொண்டார். அது எப்படிச் சம்பவித்ததென்றல், அவளுடைய புதல்வர்களில் ஒருவன் கடுமையான நோய்கண்டு மரணத்தருவாயில் இருந்தான். எவ்வித சிகிச்சை செய்தும் குணமுறாது, கடைசியாக வைத்தியர்களே அவன் தப்பமாட்டானென்று கூறிவிட்டார்கள். அவளுடைய சகோதரன் அவளைப்பார்த்து அன்பாகச் சொல்லுவான்: "உமது மகன் சுகமடையவேண்டுமென நீ விரும்புவது இயற்கைதான்; எனவே, என்னேடு சேர்ந்து ஒரு பிரியதத்த மந்திரம் சொல்லு; உனதுமகன் சுகமடைந்தால் கத்தோலிக்கசமயத்தை நல்லாய் ஆராய்ந்து படிப்பாயென்றும், அது உண்மையானதெனக் காணில், எவ்வளவு தியாகஞ் செய்யவேண்டியிருந்தாலும் அதைச் சட்டைபண்ணது, அச்சமயத்திற் சேர்ந்துகொள்வாயென்றும் கடவுளுக்கு வாக்குக்கொடு."

அவன் சகோதரி இதைவிரும்பவில்லை. என்றாலும், தனது பிள்ளையின் சௌக்கியத்தை முன்னிட்டுத் தன் சகோதரனின் கேள்விக்கு இசைந்தாள். பிரியதத்தமந்திரத்தை அவரோடு சேர்ந்து செபித்தாள். என்ன அதிசயம், அடுத்தநாளே அவள்மகன் பூரணசுகமடைந்தான். தாய் தனது வாக்குத்தத்தத்தை மறக்கவில்லை. கத்தோலிக்கசமயத்தை முறைப்படி படித்துத் தன் முழுக் குடும்பத்தோடும் திருச்சபையிற் சேர்ந்துகொண்டாள்.

வண. தக்வெல்சுவாமியார் சொன்ன ஒரு பிரசங்கத்தின்போது இச்சம்பவம் கூறப்பட்டது. "சகோதர, சகோதரிகளே! கத்தோலிக்க சமயத்தைத் தழுவியவனும், தன் சகோதரியை மனந்திருப்பியவனுமாகிய அந்தப் பையன் தன்சீவியம் முழுவதையும் தேவதொண்டுக்கு அர்ப்பணஞ்செய்துள்ளான்; உங்களுக்கு இப்போது பிரசங்கஞ் செய்யும் குருவானவராகிய நானே அந்தப்பையன்; நான் இந்த நிலையத்தில் இப்போது இருப்பதற்குக்காரணம் தேவமாதாவின் சனுகையேயொழிய வேறல்ல; நீங்களும் உங்களைத் தேவமாதாவுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுங்கள்; பிரியதத்த மந்திரத்தை, செபமாலையைத் தவறாது ஒவ்வொருநாளும் சொல்லமறவாதீர்கள்; பேதுருவென்னுங் கல்லின்மேல் கிறீஸ்துநாதரால் ஸ்தாபிக்கப்பட்டதும், நரகத்தின்வாசல்கள் மேற்கொள்ளாதனுமாகிய உண்மைத் திருச்சபையிலிருந்து பிரிந்துபோன புரொட்டஸ்தாந்தசகோதர ஞானவெளிச்சம் பெற்றுத் திருச்சபையோடு ஒன்றிக்கவேண்டுமென்று இந்தநல்ல தாயாரிடம் மன்றாடுவாருங்கள்."

* * *

அன்பான சதாசகாயமாதா மூலமாய் நான் கேட்டுக்கொண்ட இரு சகாயங்களும் பூரணமாய்க் கிடைத்துவிட்டன. நேர்ந்தபடி இதைப் பிரசித்தப்படுத்தி அவவுக்கு நன்றிகூறுகிறேன்.

இளவாலை மரியதாசன்

### திருநாள் அட்டவணை

மார்கழி மாதம் — 1953

| | | | |
|---|---|---|---|
| வெ | 11 | அ. தமாசியார், பா. த. | (வெ) |
| சனி | 12 | அ. எப்பிமக்கியார், வே. | (வெ) |
| ஞா | 13 | ஆகமனகால 3-ம் ஞாயிறு — அ. பிரகாசியம்மாள், க. வே. | (ஊ) |
| தி | 14 | அ. ஸ்பிரிதியோன், மே. | (வெ) |
| செ | 15 | அ. வலேரியான், மே.வே. | (வெ) |
| பு | 16 | அ. எயுசேபியார், மே.வே. | (சி) |
| வி | 17 | அ. தேவசகாயர், மே. | (ஊ) |

### பாலியனின் கல்வித்திறமை

ஹோகூரைச்சேர்ந்த செகமற் எனும் இடத்துக்குச் சமீபமான றப்பர்த் தோட்டம் ஒன்றிலே மலையாளத்தவனை கோவிந்த நாராயணன் எனும் ஆறுவயதுப் பாலியன் ஒருவன் தற்போது தனது ஆறுவதுபாஷையைப் படித்துவருகிறானெனச் சிங்கப்பூரிலே செய்திகிடைத்திருக்கிறது. இப்பாலியன் ஏற்கனவே தமிழ், தெலுங்கு, தனது சொந்தப்பாஷையான மலையாளம், மலாய, ஆங்கிலபாஷைகளைப் பேசியும், வாசித்தும், எழுதியும் வருகின்றான். மனேஜரான திரு. எச். ஜே. ஹென்ஷல் என்பவர் அத்தோட்டத்துச் சீனப்பாடசாலைக்குச் சமீபத்திலே தமது வழமையான தரிசனையின்போது, நீ என்ன செய்கிறாயென்று அப்பாலியனை வினவியபோது, "நான் சீனபாஷை படிக்கிறேன்" என்று சுத்தமான ஆங்கிலத்தில் அவன் விடையிறுத்தான். கோவிந்தநாராயணன் மற்றெல்லாவகையிலும் ஓர் சாதாரண பிள்ளையைப்போலவே இருக்கின்றான். வருகிற தைமாதம் செகமற்றிலுள்ள அரசினர் ஆங்கிலபாடசாலையில் படிக்கவிருக்கிறான். அங்கே கோமாலி றப்பர்த்தோட்டக் கம்பெனியால் ஆக்கப்பட்ட முடிசூட்டுவிழா வித்தியாவெகுமதியே அவனுக்கு ஏற்படும் சகலசெலவையும் பொறுத்து அவனைப்படிப்பிக்கும்.

## PRAYER COMPOSED AND RECITED BY HIS HOLINESS THE POPE FOR THE MARIAN YEAR

*(The translation in Tamil will appear in our next issue).*

Enraptured by the splendour of your heavenly beauty, and impelled by the anxieties of the world, we cast ourselves into your arms, O Immaculate Mother of Jesus and our Mother, Mary, confident of finding in your loving heart appeasement of our ardent desires, and a safe harbour from the tempests which beset us on every side.

Though degraded by our faults and overwhelmed by infinite misery, we admire and praise the peerless richness of the sublime gifts with which God has filled you, from the first moment of your conception until the day on which, after your Assumption into Heaven, He crowned you Queen of the Universe.

O crystal fountain of faith, bathe our minds with the eternal truths.

O fragrant lily of all holiness, captivate our hearts with your heavenly perfume.

O conqueress of evil and death, inspire in us a deep horror of sin which makes the soul detestable to God and a slave of hell.

O well-beloved of God, hear the ardent cry which rises up from every heart in this year dedicated to you.

Bend tenderly over our aching wounds, convert the wicked, dry the tears of the afflicted and oppressed, comfort the poor and humble, quench hatreds, sweeten harshness, safeguard the flower of purity in youth, protect Holy Church, make all men feel the attraction of Christian goodness.

In your name, resounding harmoniously in Heaven, may they recognise that they are brothers and that the nations are members of one family, upon which may there shine forth the sun of a universal and sincere peace.

Receive, O Most Sweet Mother, our humble supplications and, above all obtain for us that one day, happy with you, we may repeat before your throne that hymn which today is sung on earth around your altars:

"You are all beautiful, O Mary, you are the glory, you are the joy, you are the honour of our people." Amen.

*Re-prints of this Prayer will be available from our Press.*

## சுதேச வர்த்தமானம்

### பாப்பரசர் இயற்றிய செபம்

பரிசுத்தமிகு மரியாயின் வருட ஆரம்பவிழாவைச் சென்ற 8-ந்திகதியன்று நடத்திவைத்தபோது தாமாகவே இயற்றி அவ்வேளை சொல்லியசெபம் ஆங்கிலத்திலே இப்பத்திரிகையில் இன்று வெளியாகின்றது. இதன் தமிழாக்கம் மறுமுறை வெளிவரும்.

### விசேஷ தபால் முத்திரை

மாட்சிமைதங்கிய எலிசபெத் மகாராணியாரும், அவர் நாயகரான எடின்பறோகோமகனும் வருகிற சித்திரை மாதம் இலங்கைக்கு விஜயஞ்செய்ய விருப்பதைமுன்னிட்டுப் பத்துச்சதம் பெறுமதியான ஓர் விசேஷ இனத் தபால்முத்திரையைப் பாவனைக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது. இதிலே கண்டிப்பெரகராவைக் காட்சியை மகாராணியார் கண்டுகளிக்கும்பாவனையான பிரதிமை அமைந்திருக்கும். அதற்கிடையிலே பலவிதமான காட்சிகளைவர்ணிக்கும் பிரதிமைகள் அமைந்த 2, 3, 6, 25, 40, 50 சதம், 2, 5, 10 ரூபா பெறுமதியான புதிய தபால்முத்திரைகள் வருகிற தை மாதப் பாவனைக்குத் தயாராயிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### அதிவிருத்தாப்பிய கமக்காரர்

பொத்துகலையிலிருந்து சிலமைல் தூரத்திலுள்ள மட்டவப்பலாத்தை எனும் கிராமத்தில் வசிப்பவரான சுறும்பாளனும் அதிவிருத்தாப்பியர் சமீபத்திலே தனது 11[illegible]-வது வருட பிறந்த பெருநாளைக் கொண்டாடினர். இவர் தமது 10-வது வயதுமுதல் செய்துவந்ததுபோலவே அன்றும் வயலுக்குச் சென்று வேலைசெய்தார். தினமும் இவர் காலை 6 மணிக்குமுன்னரே வயலுக்குச் சென்று பூரணமும் வேலைசெய்து வருகின்றார். இவருக்கு இன்னும் ஒரு பல்லுத்தானும் விழவில்லை. நல்ல தேகக்கட்டும், சுகபலமும் உடையவராய் இருக்கின்றார். இதுவரை கடுமையான வருத்தமொன்றும் இவருக்கு வரவுமில்லை. அதனால் சிகிச்சைபெறுவதற்காக ஆஸ்பத்திரிக்கோ, அல்லது மருந்துச்சாலைக்கோ இவர் சென்றதும் கிடையாது. இவருக்கு எட்டுப்பிள்ளைகள் இருக்கின்றார்கள். அவர்களில் மூத்தமகனுக்கு வயது 67. அவர்களைத்தவிர நூற்றுக்கு மேற்பட்ட பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகளும் இருக்கின்றார்கள். குருநாகலுக்கு ரெயிற்பாதையும், கொழும்பு—குருநாகல்தெருவும் அமைக்கப்பட்டவந்ததை இவர் இன்னமும் ஞாபகத்தில் கொண்டிருக்கிறார். இவருடைய தகப்பனார் கண்டிக் கடைசி அரசனைக் கண்ணாரக் கண்டிருக்கின்றார்.

### சபாநாயகரின் நன்மதி

“உமதுமாதிரிகையை மற்றவர்களும் பின்பற்றத்தக்கதாக இலங்கையில் நெசவுசெய்த சுதேசசேலையொன்றை அணிந்துகொண்டு கூட்டத்துக்குவாருமென இந்தக்கூட்டத்துக்கென்று நான்வரும்போது எனதுபாரியாரைக் கேட்டுக்கொண்டேன்” என்று மாறுவில்கூட்டுறவுப்புடவை நெசவுதொழிலாளர் சங்க வருடாந்தகூட்டத்திலே சனப்பிரதிநிதிகள்சபையின் சபாநாயகரான திரு. அல்பேட் எவ்: பீரிஸ் அவர்கள் கூறலாயினர். மேலும் அவர் பேசியபோது: இந்நாட்டிலே உற்பத்திசெய்யப்படும் புடவைகளுக்கு ஓர்மதிப்புக்கொடுக்குமாறு பெண்மணிகள் குறைந்தபட்சம் வீட்டிலாவது இலங்கையில் நெசவுசெய்த சுதேசபுடவைகளைத் தரிக்கும் இயக்கம் ஒன்றைத் தொடக்கி அதன்மூலம் புடவைநெசவுதொழிலாளர் தங்கள் உற்பத்தியைப் பெருக்கவும், சனங்களின் புடவைத்தேவைகளைச் சமாளிக்கவும் ஊக்கம் அளிக்கவேண்டும்; இந்தியர்கள் ஓர்விதிமுறையாக இந்தியபுடவைகளைத் தரிக்கிறார்கள்; இலங்கையர்களும் அவர்களுடைய சாதனையைக் கண்டுபாவிக்கவேண்டுமெனக் கூறினர்.

மதிப்புரைகள்

## வேளாங்கண்ணிக் குரலொலி

“கத்தோலிக்க அச்சுப்பிரசுர அலுவல் மிகப்பெரியது; அதிக சக்திவாய்ந்தது; மிகுந்த செல்வாக்குடையது. ஆகவே, அதன் விர்த்திக்காகச் செய்யுஞ் சிறுதொண்டும் முக்கியமானதாம். ஏனெனில், அச்சுப்பிரசுரத்தால் விளையும்பயன் பெருமிதமானது. நல்லபிரசுர வேலைக்காக நீங்கள் ஆற்றும்பணி எமக்குத்தானே செய்யப்பட்டதெனக் கருதுவோம். கத்தோலிக்க பிரசுர வேலை நமஇருதயத்திற்குப் பிரியானது. இந்தஅலுவல்மூலம் அதிக நன்மை, மிகுமானபலன் எய்திடுமென எதிர்பார்க்கிறோம்” என்று கத்தோலிக்க அச்சுப்பிரசுர அலுவலின் கனகாத்திரத்தைப்பற்றிப் 11-ம் பத்திநாதபாப்பானவர் எடுத்துக்கூறிய காத்திரமிக்க பொன்மொழிகளையே தனது விருதுவாக்கியமாகக்கொண்டு தென்னிந்தியாவைச்சேர்ந்த தஞ்சை நகரிலிருந்து வெளிவரத் தொடங்கியிருக்கும் “வேளாங்கண்ணிக் குரலொலி” என்ற கத்தோலிக்க மாதாந்திரவெளியீட்டின் குரல 1 — ஒலி 3 வரப்பெற்றோம். “வேளாங்கண்ணி” என்ற மகிமையானபெயரே இதற்கு ஓர் தனிப்பெருமை அளிக்கும்போது அதன் குரலொலியின் பெருமையைப் பற்றி வர்ணிக்கவேண்டியதில்லை. ஆம், வேளாங்கண்ணிமாதா என்றாலே போதும், மாதாபற்றுத் தானகவே பொங்கியெழுமன்றோ! அங்ஙனமாக அத்திருநாயகியினது புனிதத்தலத்தின் நாமத்தை எடுத்துக் கூறிக்கொண்டும், தனதுமுற்பக்கத்திலே அருளும், புன்னகையும்பொழியும் அவரது திருவுருவப்பிரதிமையையும், அவர் எழுந்தருளியிருக்கும் கவின்மிக்க ஆலயத்தின் பிரதிமையையும் தாங்கிக்கொண்டும் பொலிவுற்றுத்திகழும் இந்தவெளியீடு மொன்சிஞ்ஞோர் மோர்த்தாவாஸ் சுவாமிகளைத் தனது ஆசிரியராக அடைந்திருப்பது ஓர்பேரதிஷ்டமே. இதிலே ஆசிரிய சுவாமிகளாலும், சுவாமி எஸ். ரி. அமலநாதர், மொன்சிஞ்ஞோர் ஆர். அருளப்பா, சுவாமி எ. இருதயசாமி, சுவாமி பி. பி. சில்வேறாமுதலாம் குருப்பிரசாதிகளாலும், பிறராலும் ஆராய்வுடன் எழுதப்பெற்று அழகான தமிழிலே வெளிவந்துள்ள கட்டுரைகள், கதை, செய்யுள் ஆகியன அறிவுக் களஞ்சியங்களும், ஞானமனோற்சாகம் அளிப்பனவுமாகும். வேளாங்கண்ணிமாதாவின் சகாயங்கள், வேளாங்கண்ணி மார்ச். ஆரோக்கியமாதாவுக்கு இடைவிடா நவநாள் என்பனவும் இதிலே இடம்பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது. கத்தோலிக்கதமிழுலகம் இப்புதிய கத்தோலிக்கவெளியீட்டையும் ஆதரித்து நன்மையடைய வேண்டுமென்பதே நமது பேரவலாகும். இதன் சந்தா வருடமொன்றுக்கு ரூபா 2/- கிடைக்குமிடம்: மனேஜர், தொன் பொஸ்கோ அச்சகம், தஞ்சை, தென்னிந்தியா.

## ஒளியின் உதயம்

வெண்பா

1. வானம் புரக்க வரண்டிருந்த வையகத்தே
ஞானம் பெருக்கி நலமளிக்க — ஈன
மனிதகுல மீடேற்ற மன்னன் உதிப்பச்
சனித்தாளே மாசின்றித் தாய்.

2. ஆனைன் யுவக்கீம் அன்னை தந்தை யாகவே
கோனார் அருளாற் கருவானள் — *மானருள்
எண்ணற்ற ஆசி இறைவன் திருவருளால
மண்ணிலே பெற்றுயர்ந்த மாது.

3. காயின் வழியாகக் காசினியிற் சூழ்ந்துவரும்
கோயின் கெடுதியின்றிச் சூலானள் — பேயின்
இருளோட்டி ஞான ஒன்ப ஒளிகூட்டி
அருளூட்டும் அன்பின் அணங்கு.

4. அரவாக நிற்கும் அலகையே உன்றன்
தரம்நசுக்கத் தையல் படைப்போம் — நரீலென
பேஎய் கலங்கப் பிதாச்சொன்ன பெண்ணனை
தாஅய் சனித்தாள் தலத்து.

5. முக்காலும் கன்னிகையாள் மூவுலகும் நற்றுயாள்
எக்காலும் எங்கள் இராக்கினியாள் — அக்காலை
மானர் குலத்தின் மணியாய் வரக்கருவாய்
ஆனள் மலரென்ப தற்று.

6. கார்சூழ் வரைசேர் கலிலேய நன்னட்டில்
பார்புகழும் தாவீதன் சந்ததியில் — மார்கழியின்
நாலிரண்டாம் நாளினிலே நங்கை உருவாகிச்
சூலிருந்தாள் துன்பம் துடைக்க.

7. பாவ நிழலின்றிப் பாருலகில் உற்பவித்த
தேவ சுதனின் திருத்தாயை — ஆவலொடு
போற்றி வருபவரின் பொல்லாத் துயரெலாம்
காற்றுய்ப் பறக்குமே காண்.

*மானர் — பெண்கள்.

‘யுவன்’

## விவேகானந்தா திருக்குறட் கலண்டர்

யாழ்ப்பாணம், கின்னர்கல்லூரிக் கட்டடத்தில் இருந்துவருகின்ற விவேகானந்தஅச்சகம் பிரசுரஞ்செய்து வெளியிட்டிருக்கும் “விவேகானந்தா திருக்குறட் கலண்டர்” வரப்பெற்றோம். சர்வசமய சமரசமான இக்கலண்டரிலே ஆங்கிலபஞ்சாங்கமும், தமிழ்ப்பஞ்சாங்கமும், முஸ்லீம் பஞ்சாங்கமும் ஒருங்கே அடங்கியிருக்கின்றன. தினசரியாக அந்தந்த நாளுக்குரிய ஒவ்வோர்பக்கத்திலும் ஆங்கில, தமிழ், முஸ்லீம் வருடம், மாதம், திகதிகளும், தமிழ், ஆங்கிலம், சிங்களமெனும் மூன்று பாஷைகளிலே நாட்களும் தெளிவாகத் தரப்பட்டிருக்கின்றன. இன்னும் அந்தந்தக் குறித்ததேதியில் வரும் கத்தோலிக்க கடன்திருநாட்களும், மற்றும் அநேக பிரதான திருநாட்களும், யாத்திரைப்பதிகளின் உற்சவ நாட்களும், அவ்வாறே சைவர்கள், முஸ்லீம்களின் உற்சவ நாட்களும், பிறவும், மற்றும் அரசாங்க விடுமுறைநாட்களும், அமாவாசை, பௌர்ணை, அட்டமி ஆகியநாட்களும், இவற்றுடன் ஒவ்வோர் தேதிப்பக்கத்திலும் திருவள்ளுவர்குறளில் ஒவ்வோர் குறட்பாவும் அழகாகத் தரப்பட்டிருக்கின்றன. கத்தோலிக்கருக்கென் கவர்ச்சிகரமான கத்தோலிக்கபடங்கள் இந்தக்கலண்டருடன் இணைக்கப்பெற்று இவ்வத்தையும் அழகுபடுத்தக்கூடியவகையிலே காட்சியளிக்கின்றன. “அமலனை வணங்கு, அனைத்தும் பெறுவாய்”. “இரக்கங்காட்டு, இன்பம் பெறுவாய்” என இதிலே தலையிடத்தில் பொறிக்கப்பட்டுள்ள அருமையான சுலோகங்கள்இரண்டும் தினசரி தேதிகள் ஆகியவற்றைக் கவனிப்பாருக்கு நல்லுணர்ச்சி பிறப்பிக்கக்கூடியன. யாழ்ப்பாணம், விவேகானந்த அச்சகத்திலும், யாழ்ப்பாணம், பெரியகடையிலுள்ள விவேகானந்த புத்தகசாலையிலும் இதனைப் பெற்றுக்கொள்ளலாம்.



# பாலர்  பக்கம்



## அண்ணா சொல்வது :

அருமைச் சகோதரங்களே !

இது ஆகமன காலம். கிறீஸ்துநாதரின் வருகையை யூதரும், உலகத்தின் பல்வேறு சனங்களும் ஆசித்துக்கொண்டு இருந்ததை நினைவூட்டுங் காலம்.

இந்தக்காலத்தில் நீங்களும் திவ்விய யேசுவின் வருகையை ஆசிக்கவேண்டும். அவர் உங்கள் இருதயத்தில் வரும்படி, அவருடைய படிப்பனைகளை விசுவசிக்கிறதினாலும், அவருடைய சீவிய மாதிரிகைகளைப் பின்பற்றுவதினாலும் உங்கள் சீவியத்தில் அவர் எழுந்தருளும்படி ஆசிக்கவேண்டும்.

யேசு பிறந்த தினம் கிட்டி வருகிறது. அதற்கு நீங்கள் ஆயத்தஞ் செய்ய வேண்டாமா? எப்படி ஆயத்தஞ் செய்வீர்கள்? என்ன ஆயத்தங்கள் செய்யவேண்டும்? பிதாப்பிதாக்கள் கொண்ட ஆவலைப் போல விசுவாசம், நம்பிக்கை, தேவநேச முயற்சிகள் அடிக்கடி செய்யுங்கள்.

நன்மனமுள்ள மனிதர் கர்த்தருடைய வழிகளைச் சித்தஞ் செய்ததுபோலத் தாழ்ச்சி, அமைச்சல், பிறர்குறை சகித்தல் முதலிய புண்ணியங்களால் ஓர் பொற்தொட்டில் பாலனுக்கு ஆக்குங்கள்.

நாளாந்த கடமைகளைச் சுத்தகருத்துடன் செய்து, திருப்பாலனைப் போர்த்து மூட ஒருசீலை செய்து கொள்ளுங்கள்.

பொற்சரிகை என்னும் நாட்பூசையிலே நற்கருணை உட்கொள்வதால் அதில் சித்திரத்தையல் போடுங்கள்.

இவைகள் எல்லாவற்றையும் மாசில்லாத திருத்தாயாரின் பாதுகாவலில் வைத்துத் திவ்வியபாலனுக்கு ஒப்புக்கொடுங்கள். வணக்கம்.

உங்கள் அன்புள்ள
அண்ணா

## கண்டான்

'ஜெயம்'

1

வானம் மீது பறந்து திரியும்
வண்ணப் பறவை கண்டான்
தானும் பறந்து களிக்க மனிதன்
தனி விமானங் கொண்டான்.

2

உப்புக் கடலின் மீனைக் கண்டு
உள்ளம் உவகை கொண்டான்
கப்பல் மூலம் கடலில் ஓடும்
கலையைக் கற்றுக் கொண்டான்.

3

நீந்தி மகிழுந் தவளை தன்னை
நீலக் குளத்திற் கண்டான்
ஏந்து நீரில் நீந்தும் வகையை
எளிதில் அறிந்து கொண்டான்.

4

வளையி லோடிச் சிலந்தி பின்னும்
வலையின் அழகு கண்டான்
விளையும் பஞ்சை நூற்று நெய்யும்
விதமும் அறிந்து கொண்டான்.

5

பாடும் பட்சி சாலம் யாவும்
பகரும் வடிவிற் பலவாய்க்
கூடு கட்டும் வகையைக் கண்டு
கூடை பின்னிக் கொண்டான்.

## பாப்பரசரின் செல்லக்குருவி

பரிசுத்த பாப்பரசரது வத்திக்கான் மாளிகைத் தோட்டம் மிகப் பெயர் பெற்றது. பழமை வாய்ந்தது. அலங்கார மிக்கது. அதன் மத்தியிலே அன்று ஒருநாள் ஒரு சிறு குருவி தனது கூட்டில் இருந்து தவறிக் கீழே விழுந்து விட்டது. அதைப் பார்த்து நின்ற ஒருவர் விழுந்த அக்குருவியைத் தூக்கிச் சென்று பரிசுத்த பிதாவுக்குக் காட்டினார். அவர் அதை வெகு கவனமாக வளர்த்துப் பாதுகாத்து வரும்படி ஏவினார். அவருடைய மாளிகையிலேயே குருவியும் சொகுசாக வளர்ந்து வந்தது. அதிகம் விரைவிலே அவர்கள் இருவரும் சிநேகிதராகி விட்டனர். குருவி பகல் முழுவதும் கீச்சிட்ட படியே இருக்கும். காலை தோறும் அதன் கீதம் அதிக இன்பம் பயக்கும். பலமுறை பாப்பாசரது கரங்களில் போய் உட்கார்ந்து கொள்ளும்.

அவர் காலை 6 மணி தொடக்கம் மாலை நடுச்சாமம் வரைக்கும் காத்திரமான பல அலுவல்கள் பார்க்கிறவர் அல்லவா? சிலவேளை நடுச்சாமத்தின் பின்னரும் வேலையாகவே இருப்பார். ஒவ்வொருநாளும் நூற்றுக் கணக்கானோர் அவலரைப் பேட்டி காணச் செல்லுகிறார்கள். அத்துடன் அவர் வாசிக்க, எழுத வேண்டிய அநேக காரியங்களும் உண்டு. அத்தகைய கடுமையான வேலைகளின் மத்தியிலும் அவர் தமது செல்லக் குருவியை மறப்பவர் அல்ல. ஒவ்வொரு நாளும் தமது சிநேகிதனைச் சந்திக்க நேரம் தேடிக் கொள்வார். அவரது சிநேகிதனாக வாழும் பெரிய பாக்கியம் பெற்றுவிட்டது அந்தச் செல்லக் குருவி.

நிற்க, பட்சிகளை நேசித்துவந்த ஒரு அர்ச்சிய சிஷ்டரை நீங்கள் அறிவீர்களா? அவர்தான் அர்ச். பிரான்சீஸ் அசிசியார். அவரது அன்பும், உதாரகுணமும் மிருகங்கள், பட்சிகளை அவருடைய சிநேகிதர்கள் ஆக்கி விட்டன. அவர் அவைகளுடன் சல்லாபம் செய்வார். அவைகளும் அவர் சொல்வதை எப்போதும் விளங்கிக் கொண்டே வந்தன.

பிள்ளைகளே! இந்தச் செல்லக் குருவி பரிசுத்த தந்தையின் கரங்களில் பதனமாய்க் காப்பாற்றப் பட்டது போல, நீங்களும் தவறி விழுந்தால் உடனே எழுந்து, உங்கள் நல்ல சிநேகிதராகிய யேசுவிடம் ஓடிப்போங்கள். அவரது கரங்களில் உங்களை ஒப்படையுங்கள். அவர் உங்களைப் பதனமாய்க் காப்பாற்றுவார். நீங்கள் அவருடைய செல்லக் குருவிகளாய் வாழ்வீர்கள்.

— எம். ஜே. எம்.

## மூளைக்கு வேலை

வியாபார விஷயமாக இரத்தினம் கொஞ்சம் தேங்காய்கள் கொண்டு போனான். அவற்றை,

| | | | |
|---|---|---|---|
| 2ஆல் | பிரித்தால் | 1 | மிச்சம்வரும். |
| 4ஆல் | ,, | 1 | ,, |
| 5ஆல் | ,, | 4 | ,, |
| 6ஆல் | ,, | 3 | ,, |
| 7ஆல் | ,, | 3 | ,, |
| 8ஆல் | ,, | 1 | ,, |
| 9ஆல் | ,, | 3 | ,, |
| 3ஆல் | ,, | சரியாக அடங்கும். | |

மொத்தத் தேங்காய்கள் எவ்வளவு?

129

எஸ். தம்பிராசா,
கிறீஸ்துராசா பாடசாலை,
முருங்கன்.

## பந்து விளையாடுவோம்

தம்பிவாடா பந்துவிளை யாடுவோம்
தந்தனை பாடிவிளை யாடுவோம்
தங்கராசா பந்துஇதோ பாரடா
தம்பிஇது நல்லபந்து பாரடா
அப்பாவாங்கித் தந்தபந்து பாரடா
அண்ணாவுக்குத் தந்தபந்து பாரடா
அம்மாவிடம் நீஅழுது கேளடா
அப்பனொன்று வாங்கித்தரு வாங்கடா
பந்துபோல் உருண்டைஎன்று பூமியே
பாடஞ்சொல்லித் தந்தாவாத்தி யாயியே
சின்னயேசு கையிற்பந்து தான்என்று
சின்னமலர் சொன்னாள்அல்லோ தான் அன்று
பந்தன்றால் சின்னத்தெரேசா; எவ்வி தம்
பாலனும் எறிந்துவிளை யாடினார்?
பாலனுக்கு மாமா,அன்றி இல்லையா?
பந்துவாங்கக் காசுபணம் இல்லையா?
பாலனுக்கு மாமாவிடம் கேட்டுநாம்
பந்தொன்று வாங்கிக்கொடுப் போமடா
சின்னத்தெரேசா பந்தன்றால் யேசுக்குச்
சின்னப்பாலர் நாமும்பந்து தான்அல்லோ!
சின்னமலர்ப் பந்தொன்று செய்துநாம்
சின்னப்பாலன் கையிற்கொடுப் போமடா

இருவரும் பாடிப்பாடிப் பந்து விளையாடுகிறார்கள். இடையிலே தம்பி கேட்கிறான், "அண்ணா இந்தப்பந்தை எனக்குத் தாறீங்களா?"

"இல்லை, நான் தர மாட்டேன்; நீ போய் அம்மாவிடம் அழுது கேட்டால் ஒன்று வாங்கித் தருவா, கட்டாயம்."

"அவ வாங்கித் தரா விட்டால் என்ன செய்ய."

"அப்பாவிடம் கேள்; அவர் வாங்கித் தருவார்."

"அவர் வாங்கித் தரா விட்டால் என்ன செய்ய."

மாமாவிடம் கேள்; அவர் கையைப் பிடித்துக் கொஞ்சிக்கேள்; தம்பிக்கு ஒரு பந்து வாங்கித் தாருங்கோ என்று"

"மாமாவும் வாங்கித் தரா விட்டால் அப்ப ....."

இவ்வாறு சம்பாஷித்துக் கொண்டு விளையாடும்போது தற்செயலாகப் பந்து தம்பியின் கண்ணில் போய்ப் பட்டுவிட்டது. உடனே அவன் சத்தம் போட்டு உரமாக அழத்தொடங்கினான்.

அப்போது வீட்டினுள் இருந்ததாய் "பொன்ராசா, தம்பி ஏன் அழுகின்றான்?"

"அவன் சும்மா அழுகிறான் அம்மா" என்று சொல்லிக் கொண்டு, "தம்பி பந்து தாறேன் அழாதேயடா; அம்மா எனக்கு அடிக்கப் போகிறா."

தம்பி பந்தை வாங்கிக் கண்ணைத் துடைத்துக் கொண்டு சிரிக்கின்றான்.

— J. A. G.

## என்ன மாலை?

| | | |
|---|---|---|
| என்ன மாலை | — | பூ மாலை |
| என்ன பூ | — | மல்லிகைப் பூ |
| என்ன மல்லிகை | — | வன மல்லிகை |
| என்ன வனம் | — | பூங்காவனம் |
| என்ன பூங்கா | — | இராச பூங்கா |
| என்ன இராசா | — | பொன் இராசா |
| என்ன பொன் | — | தங்கப் பொன் |
| என்ன தங்கம் | — | சுடர் தங்கம் |
| என்ன சுடர் | — | மணிச் சுடர் |
| என்ன மணி | — | மாலை மணி |
| என்ன மாலை | — | செப மாலை |

— என். செபமாலை

# கிழவனாரும் பொதிமூடையும்

(M. J. மரியாம்பிள்ளை.)

மாரிகாலம் ஓர்நாள் பொழுது சரியும் நேரம். குளிர் அதிகம். இரவும் நெருங்கியது. நீடிய வெள்ளைத் தாடியுடன் கிழவனார் ஒருவர் தெருவின் அருகே உட்கார்ந்து இளைப்பாறுகிறார். இந்தத்தெரு காட்டு வழியாகச் செல்லுகிறது. அவர் பக்கத்தில் ஓர்பெரிய பொதி மூடையும் இருக்கிறது.

அந்தத் தெருவால் செல்லும் ஒவ்வோர் பிரயாணியையும் தனக்கு உதவி செய்யும்படி அவர் அழைக்கிறார். "சிநேகிதா! இந்த மூடையைத் தூக்க எனக்கு உதவி செய்வாயா?" என்று ஒவ்வொருவரையும் கேட்கிறார். ஆனால், அவருக்கு உதவி செய்வார் ஒருவரும் இல்லை. எல்லோரும் தத்தம் மூடைகளுடன் விரைந்து செல்கின்றனர்.

கிழவனார் பொறுமையுடன் காத்திருக்கின்றார். பட்டுப் பீதாம்பர உடையுடனும், பொன்னால் செய்த ஓர் ஊன்று கோலுடனும் தனவந்தனை ஓர் வியாபாரி வருகிறான். அவனைத் தனக்கு உதவி செய்ய அழைக்கிறார் கிழவனார். அவனோ அவருக்கு உதவி செய்ய மறுத்து விட்டது மாத்திரம் அல்ல; "சோம்பேறியே! உனது மூடையைச் சுமக்க உன்னால் முடியாதா? தூக்கிக் கொண்டு போ; அல்லது இருந்து கொள்" என்று கூறி விட்டு அப்பால் போகிறான்.

வேறு ஒருவன் ஒரு கொழுத்த கோழியுடன் வருகிறான். அவனையும் கெஞ்சிக் கேட்டார் அவர். "போ, போ, உனக்கு உதவி செய்ய வந்தால் எனது கிறிஸ்மஸ் கோழி ஓடி விடும்; நான் அதைக் கொண்டு கெதியாய் வீட்டுக்குப் போகவேண்டும்; என்னால் உதவி செய்ய முடியாது" என்று அவரைப் பரிகாசஞ் செய்து தலையை அசைத்துச் செல்லுகிறான். பாவம், கிழவனார் குளிரால் நடுங்கிக் கொண்டு இருக்கிறார்.

ஓர் இனிமையான இராகம் கிழவனாரின் காதில் கேட்கிறது. நிமிர்ந்து பார்த்தார், ஒரு சிறுபையன் தனது தோளில் ஓர் விறகு கட்டைச் சுமந்து கொண்டு வரக் கண்டார். அவனையும உதவிக்கு அழைத்தார். அவன் நல்ல பலசாலி. ஓர் விறகுவெட்டியின் மகன். காட்டிலே சஞ்சரித்து வருபவன். "ஆம், இதோ நான் உமக்கு உதவி செய்ய வருகிறேன்" என்று பதில் அளித்தான். கிழவனாரின் கவலை நீங்கியது. தனிமையாக அந்தப் பெரிய பொதிமூடையைத் தூக்கினான். "நீர் போகவேண்டிய இடம் எது?" என்று கேட்டான்.

"நான் உனக்குச் சொல்லுகிறவரையும் நேரே முன்னுக்கு நடந்து போ" என்றார் கிழவனார்.

"ஐயா! இந்தவிறகு கட்டை எனது கிராமத்துக்குக் கொண்டுபோய் விற்க வேண்டும்; பிந்தப் போகிறேன்" என்றான் பையன்.

"மகனே உனது சரித்திரத்தை எனக்குச் சொல்" என்றார் கிழவனார்.

"என்பெயர் ஜேம்ஸ்; எங்கள் குடும்பத்தில் ஏழு பிள்ளைகள்; நானே மூத்தவன்; நாள்முழுவதும் என் தகப்பனுருக்கு உதவி செய்கிறேன்; அவர் மரங்களை வெட்டிச் சிறு துண்டுகளாக்கி விடுவார்; நான் அவற்றைக் கட்டிச் சுமந்து கொண்டுபோய் விற்று வருகிறேன்."

"தம்பி! விறகு விற்பதினால் வரும் பணம் உங்கள் கிறிஸ்மஸ் விருந்துக்குப் போதுமா?"

"இல்லை, அப்பா. அது மிகச் சொற்பந்தான்."

இவ்வாறு இருவரும் சம்பாஷித்துக் கொண்டு போகையில் ஜேம்ஸ் வசித்து வந்த சிறுகுடிசை சமீபித்தது. அப்போது அவன் தனது குடிசைக்கு வந்து குளிர் காய்ந்து இளைப்பாறிக் கொண்டு போகும்படி அவரை அழைத்தான்.

"ஆ! நீ ஒரு அருமையான பையன்தான்" என்று சொல்லிக் கொண்டே கிழவனார் அடுப்பண்டை இருந்த ஒரு வாங்கின்மேல் உட்கார்ந்து பொட்டணத்தை அவிழ்க்கிறார்.

"அப்பா! இந்தக் கிறிஸ்மஸ் நாட்களிலே உங்களுக்குஇந்தப் பிறர்சிநேகக் கிரிகையைச் செய்யக் கிடைத்ததையிட்டு நான் மிகவும் சந்தோஷப் படுகிறேன்."

"ஆம், தம்பி! இதுதான் எனது பிரயாணம் முடியும் இடம்; இங்கே வா; இந்தப் பொதிமூடைக்குள் இருப்பவைகளைப் பார்; இவைகள் எல்லாம் உனக்குத் தான்."

ஜேம்ஸ் ஆச்சரியமும், நன்றியும் நிறைந்த கண்களுடன் மூடையை நோக்கினான். மிட்டாய், சொக்லேற், பழவகை ஆகியன அதனுள் இருந்தன. கிறிஸ்மஸ் காலத்துக்கு ஏற்ற வெகுமதிகள்.

"தம்பி! இதற்குள் ஒரு பொன் முடிச்சும் இருக்கிறது; உங்கள் எல்லாருக்கும் வேண்டிய மட்டும் விளையாட்டுச் சாமான்களும், பொம்மைகளும், பட்டாசுக் கட்டுகளும் இங்கே பார்; இவைகள் எல்லாம் உனக்குத் தான்."

"அப்பா! முழுவதும் எனக்குத் தானா?"

"ஆம், மகனே! நீ செய்த பிறர்சிநேகக் கிரிகைக்குச் சம்பாவனை இது; இப்படியே எப்போதும் உன் அயலாருக்கு உதவி செய்."

"அப்படியானால் நீங்கள் யார் அப்பா? எவ்வளவோ அன்புள்ள பாட்டனைக் காணப் படுகிறீர்களே; பெரிய உபகாரம்; அப்பா! நீங்கள் யார்?"

"தம்பி! நான்தான் நீக்கலாஸ் மேற்றிராணியார்; கிறிஸ்மஸ் காலத்தில் உங்களைச் சந்திக்க எப்போதும் வருகிறேன்" என்று சொல்லித் தமது கைகளை உயர்த்தி அவனை ஆசீர்வதித்து மறைந்தார்.

அர்ச். நீக்கலாஸ் சிறுபிள்ளைகளில் பட்சமுள்ளவர். இவரின் திருநாள் மார்கழி மாதம் 6-ந்திகதி. பெருந்தொகையான சிறுவர், சிறுமிகள் இவரிடமிருந்து நன்கொடைகளும், கிறிஸ்மஸ் வெகுமதிகளும் எதிர்பார்க்கின்றனர்.

## நிறம்கொடுக்கும் போட்டி



**அருமையான பிள்ளைகளே!**

நிறம் கொடுக்கும் போட்டி இல. 2 இம்முறையும் வெளிவருகிறது. இதன் ஒழுங்கு முறைகள் யாவும் முன் போலவே.

குறிப்பு:— முடிவு திகதி 25-12-53. விடைகள் நான்குசத முத்திரைஒட்டித் திறந்ததபாலில் அனுப்பப்படலாம்.

விலாசம்: "கணிதப்பூச்சி" ஆசிரியர் மேற்றிராணியார் மாளிகை, யாழ்ப்பாணம்.

## அறிவுச் சுடர்

1. இக்காலத்து நவீனமாதிரியான பளுவுள்ள ஓர்வெடிகுண்டு விமானத்தைக் கட்டுவதிலே செலவிடப்படும் பணத்தையும், கூலியாட்களின் உழைப்பையுங்கொண்டு எத்தனை கலாசாலைகள் கட்டலாம்?

செங்கற்கள்கொண்டு இக்கால நவீன மாதிரியான 30 கலாசாலைகள் கட்டலாம்.

2. ஆங்கிலத்தில் "வெனிஸ்டே" (Wednesday) என்று அழைக்கப்படுவதாகிய புதன்கிழமைஎன்றபெயர் எவ்வாறு பிறந்தது?

"வொடென்" (Woden) என்ற ஆங்கிலோ - சாக்சனிய தெய்வத்தின் பெயரிலிருந்து பிறந்தது. தற்போது புதன்கிழமை திருச்சபையாலே அர்ச். சூசையப்பரின் பக்திக்கென நேர்ந்து கொள்ளப் பட்டிருக்கிறது.

3. பரிசுத்தபாப்பாசர் ஏன் வெண்மையான நீண்ட அங்கி தரிக்கின்றார்?

ஐந்தாம் பத்திநாத பாப்பானவர் தோமினிக்குவின் சபையைச்சேர்ந்தவர். அதனால்அவர் வெண்மையான நெட்டங்கி அணிந்திருந்தார். அவரிலிருந்து அவரைத்தொடர்ந்துவந்த பாப்புமாரும் அவரைப்போலவே வெண்மையான அங்கிதரிக்கும் வழக்கத்தை மேற்கொண்டதாகச் சொல்லப்படுகிறது.

4. பாப்புமாருள் எவராவது தங்கள்பதவியை இராசினாமாச் செய்திருக்கின்றனரா?

ஆம், ஓர்வனவாசியான அர்ச். ஐந்தாவது செலஸ்தீன்எனும் பாப்பானவர் (1294) தமதுவிருப்புக்குமாறாகத் தம்முடைய 84-ம் வயதிலே பாப்பானவராகத் தெரியப்பெற்றார். எட்டுமாதம் மாத்திரமே திருச்சபையை ஆட்சிசெய்தபின் தமதுபதவியை இராசினாமாச் செய்துவிட்டார். இவர் 1913-ம்ஆண்டு அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்பெற்றார்.

ஜூனைஅத் பிரான்சிஸ் ஜானகிபுரம்

## பொழுதுபோக்கு

எசமான் — (வேலைகாரனை நோக்கி) என்ன காரியம, கடுமையாக யோசித்துக் கொண்டு நிற்கிறாய்?

வேலைகாரன் — ஆமாங்க ஐயா, இந்தப் பாழும்மழை எப்பஓயும் என்றுதான் யோசித்துக் கொண்டு நிற்கிறேனுங்க.

எசமான் — மழை உன்னை என்னடா செய்கிறது?

வேலைகாரன் — அது கெடுக கெடுகப் பெய்துகொண்டு இருந்தாங்க எப்படித் தோட்டத்துக்குத் தண்ணீர் இறைக்கிறதுங்க.

* * *

ஆசிரியர் — வில்லி, 15 மாம்பழங்களிலே 5 பழங்களை நீ தின்று விட்டாய். 5 பழங்களை உன் தம்பிக்குக் கொடுத்தாய். மிச்சமெத்தனை?

வில்லி — 15 பழங்கள் சார்.

ஆசிரியர் — (கோபத்துடன்) என்ன வில்லி! இந்தவகுப்பிலே இரண்டு வருடம் இருந்துங்கூட இந்தச் சின்னக் கணக்கு உனக்குத் தெரியவில்லையே.

வில்லி — என்ன சார், நான் மாத்திரமா இந்தவகுப்பில் இரண்டுவருடம் இருக்கிறேன்? நீங்களும் தானே இருக்கிறீர்கள் சார்.

* * *

வித்தியாதரிசி — (பரீட்சைக்கு வந்த வகுப்பு மாணவர்களை நோக்கி) நான் கேட்கும் கேள்விகளுக்கு டக், டக்கென்று மறுமொழி சொல்ல வேண்டும். (ஒரு பையனைச் சுட்டி) ஆறும், நாலும்.......

பையன் — டக், டக்.

புருஷன் — ஆம், உன்னைக் கலியாணம் செய்தபோது நான் பெரும் மதியீனமாய் நடந்துகொண்டதாக இப்போதுதான் உணருகிறேன்.

மனைவி — ஆமாம், பிறகு தாங்கள் பெரும் மதியூகமாய் நடப்பீர்கள் என்று உணர்ந்துதான் அப்போது நான் தங்களைக் கலியாணம் செய்து கொண்டேன்.

* * *

ஆசிரியர் — என்ன வில்லி! உனது இடதுகாதை ஏன் பொத்திக் கொண்டு நிற்கிறாய்?

வில்லி — எங்க அப்பா சொன்னாங்க, தாங்கள் சொல்லிக் கொடுப்பதை வலது காதால் கேட்டு இடது காதால் விட்டால் படிப்புக் கெட்டுப் போகும் என்று. அதற்குத்தான் பொத்திக்கொண்டு நிற்கிறேனுங்க.

## வீரச்சொக்கன்

சொக்கன் துணிவும், புத்தியும் உள்ள ஒரு சிறுவன். அவன் ஒருநாள் தன் சிநேகிதருடன் கடற்கரையில் விளையாடிக் கொண்டு இருந்தான். அப்போது கரையிலே ஒரு பெட்டி மிதந்தது. அதை எடுக்க எல்லோரும் பயந்தார்கள். சொக்கன் அந்தப் பெட்டியை எடுத்துத் திறந்தான். உள்ளே ஒரு பெரிய பாம்பு இருந்தது. அது அவனைக் கடிக்க வந்தது. அதைக்கண்டதே மற்றவர்கள் ஓடிப் போய் விட்டார்கள். பாம்பைக் கண்டு சொக்கன் பயப்படவில்லை. "ஓ! நல்ல பாம்பே! நீயோ பெரிதாய் இருக்கிறாய்; பெட்டியோ மிகவும் சிறிதாக இருக்கிறது; என்ன அதிசயம்! இதற்குள் நீ எப்படிக் கிடந்தாய், காட்டு பார்ப்போம" என்று கேட்டான். "இதோ பார்" என்றுசொல்லி அந்தப்பாம்பு பெட்டியுள் மறுபடியும் சுருண்டு கிடந்துகாட்டியது. உடனே சொக்கன் பெட்டியை மூடிக் கடலில் எறிந்தான். அவனுடைய வீரத்தையும், புத்தியையும் மற்றவர்கள் புகழ்ந்தார்கள்.

சீ. பேர்னதேத் ஈஸ்வரி
தி. கு. க. மடம்,
மன்னார்.

## கண்டு பிடியுங்கள்

### ஆறு எழுத்துகளால் ஆனது

முதல் மூன்று எழுத்துகளும் சிறிய என்றதின் எதிர் கருத்துள்ள ஒரு சொல்.

கடைசி மூன்று எழுத்துகளும் அவிழ் என்றதன் எதிர் கருத்துள்ள ஒரு சொல்.

* * *

### ஐந்து எழுத்துகளால் ஆனது

முதல் மூன்று எழுத்துகளும் வாழ்வு என்றதன் எதிர் கருத்துள்ள ஒரு சொல்.

கடைசி இரண்டு எழுத்துகளும் சுகம் என்றதன் எதிர்க்கருத்துள்ள ஒரு சொல்.

* * *

### ஐந்து எழுத்துகளால் ஆனது

முதல் மூன்று எழுத்துகளும் சிறிய என்ற அர்த்தமுள்ள ஒரு சொல்.

கடைசி இரண்டு எழுத்துகளும் குளம் என்ற அர்த்தமுள்ள ஒருசொல்.

## Jaffna Municipal Council

### Budget—1954

NOTICE is hereby given in terms of Section 212 (b) of the Municipal Councils Ordinance No. 29 of 1947 that the Budget of the Jaffna Municipal Council containing an estimate of the available Municipal Income and details of the proposed expenditure for the year 1954, will be open for public inspection at the office of the Municipal Council for seven days commencing from 11th December, 1953.

S. A. Sabapathy,
Mayor,
Jaffna Municipal Council.

Municipal Office,
Jaffna, 4th December, 1953.

## Jaffna Municipal Council

### Supplementary Budget No. 2 of 1953

NOTICE is hereby given in terms of Section 214 (2) (b) of the Municipal Councils Ordinance No. 29 of 1947 that the Supplementary Budget No. 2 of the Jaffna Municipal Council for the year 1953, will be open for public inspection at the Municipal Office, Jaffna for seven days commencing from 11th December, 1953.

S. A. Sabapathy,
Mayor,
Jaffna Municipal Council.

Municipal Office,
Jaffna, 4th December, 1953.

## Jaffna Municipal Council

### Notice

Schedule of rates are hereby invited for supplying the following:—

Schedule of rates must be submitted in forms obtained from this Office on payment of Rs. 10/- and addressed to the Commissioner, Municipal Council, Jaffna in sealed envelops marked 'Schedule of rates' for the supply of materials.

The schedule of rates should reach this Office on or before 12 noon on Monday the 21st December, 1953.

Further particulars can be obtained from the Office of the Assistant Superintendent of Works, Municipal Council, Jaffna.

| | |
|---|---|
| Lime | Cadjans |
| Anaicoddai sand | Gravel |
| Firewood | Sinnapaliaru sand |
| 2' Metal | etc., etc. |
| ½' Metal | Boiled lime |
| Paliaru sand | Earth |
| Rubble | Kalmunai sand |

K. Shanmugam,
Commissioner,
Jaffna Municipal Council.

Office of the Municipal Council,
Jaffna, December 7, 1953.

## எங்களிடம்



ரூ. ச.

The Greatest Story Ever Told (by Fulton Oursler) 1-75

இன்பத்திலும் துன்பத்திலும் 1-00
(இல்லற ஜீவியத்தின் முன் மாதிரி)

துப்பாக்கி முனையில் ... 1-00
(மெக்ஸிக்கோ வேதசாட்சி சுவாமி மிக்கேல் புறோவின் வீரத் தியாகம்)

திக்கற்ற தையல் ... 2-00
(அநாதையான ஒரு இளம் பெண்ணின் சிறந்த கதை)

பிரதாப முதலியார் சரித்திரம் 3-90
(வேதநாயகம்பிள்ளை எழுதிய சிறந்த தமிழ் நாவல்)

தவதின உற்சவம் ... 75
(தத்தம் காலங்களில் பாவிக்கக்கூடியது)

மரியாயின் வல்லபம் ... 2-25

மலரோ—மணமோ ... 2-65

அன்பின் அழைப்பு ... 2-75

யேசுநாதர் { உயர்ந்தப் பதிப்பு 3-90; மலிவு பதிப்பு 2-75 }

வாழ்க்கையில் வழிகாட்டி 3-00

* * *

### 1954-ம் ஆண்டுக்கான இலங்கைச் சத்தியவேத பஞ்சாங்கம்

பிரதி விலை சதம் 25.

இவைகள் விற்பனைக்கிருக்கின்றன.
(தபாற்செலவு பிரத்தியேகம்)

மனேஜர்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்
யாழ்ப்பாணம்

## நேர்த்தியின் பூர்த்தி

எனக்கு முயற்சி இல்லாமல் இருந்த காலத்திலே ஆண்டவரின் இரக்கத்தினாலும், மாதாவின் மன்றாட்டினாலும், அர்ச். தெரேசம்மாள், சங். அல்போன்சா கன்னியாஸ்திரி, அர்ச். அந்தோனியார் இவர்களின் வேண்டுதலினாலும் முயற்சி கிட்டியது. நேர்த்தியின்படி பத்திரிகையில் வெளிப்படுத்துகிறேன்.

வ. இ.

## அறிவித்தல்

1953-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ந் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் அரசினர் மரக்காலையில் பின்வருவன பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

விற்பனைக்குமுன் அவற்றைப் பார்க்க விரும்புவோர் 'டிப்போக்கீப்ப'ரின் அனுமதியுடன் பார்வையிடலாம்.

(1) ஒருகூறு அடங்கிய 45 பாலைமரங்கள்.
(2) ஒரு கூறு அடங்கிய 180 கம்பிக் கட்டைகள்.
(3) ஒருகூறு அடங்கிய 250 கம்புகள்.
(4) பத்துக் கூறுகள் அடங்கிய அரிந்த மரங்கள், அரிந்த துண்டுகளும், சிலிப்பர் துண்டுகளும்.
(5) புத்தளத்தில் பயிற்சிக்காகப் பாவித்த பனைமரங்களும், கம்புகளும் அடங்கிய ஒருகூறு.
(6) ஆறு கூறுகள் அடங்கிய 100 புதிய பாலை, முதிரை, சாலை, கல்லொளியும், வேம்புமரங்களும்.


ம. நமசிவாயம்,
வடபகுதி வனபரிபாலன அதிபர்.

யாழ்ப்பாணம்
3-12-53

## பிரியாவிடை வைபவம்

கொழும்பு — நீர்கொழும்புப் பிரிவுத் தமிழ்ப்பகுதி வித்தியாதரிசியான திரு. எம். இராசசுந்தரம், B Sc., Dip. in Edu. அவர்கட்கு நீர்கொழும்புத் தமிழ் ஆசிரியசங்கத்தால் இங்குள்ள அர்ச். மரியசாயகி தமிழ்ப் பெண்பாடசாலைமண்டபத்திலே சென்ற 2-12-53 புதன்கிழமை பிற்பகல் ஓர் பிரியாவிடைக்கொண்டாட்டம் நடத்தப்பட்டது. காரியதரிசி திரு. ஜே. அலெக்சாண்டர் பெர்னண்டோ அவர்களால் ஓர் பிரியாவிடைப்பத்திரம் பாடிக் கொடுக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து வித்தியாதரிசியின் குணவிசேஷங்களையும், சிறந்த சேவைகளையும்பற்றித் திரு. டபிள்யு. பேதுரு பீரிஸ், செல்வி வெரோணிக்கா சில்வா, செல்வி ஈ. டெக்ஷியா பெர்னண்டோ ஆகியோரால் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்று ஓர்தோட்ட விருந்துபசாரணையும் நடத்தப்படலாயிற்று. ஈற்றில் வித்தியாதரிசியின் நன்றியுரையுடனும், சங்கத்தலைவர் டபிள்யு. பிறன்சிஸ் பெர்னண்டோ அவர்களின் பிரியாவிடை வாழ்த்து, ஆசிரியர்களின் பிரியாவிடைக்கீதம், தேசியகீதம் ஆதியவற்றுடனும் விழா முடிவாயிற்று.

— காரியதரிசி



## இன்ஷூரன்ஸ் ஆசாமிகள் இல்லாது போயிருந்தால்

வெகு சொற்பமானவர்களே ஆயுள் அஷ்யூரன்ஸ் பொலிஸிதாரராக இருக்கக்கூடும். ஆயிரக்கணக்கான விதவைகளும், அநாதைக் குழந்தைகளும் நிர்க்கதியாகப் பரிதவிக்கக்கூடிய நிலைமையிலிருப்பர். உங்கள் குடும்பத்திற்கு உடனடியாகப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்கு ஆயுள் அஷ்யூரன்ஸே நிச்சயமான வழியாகவிருப்பினும், ஆயுள் பொலிஸிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இன்ஸ்யூரன்ஸ் கந்தோர்கள் முன்புக்கு நீண்ட வரிசைகளில் ஜனங்கள் நின்றுகொண்டிருக்கவில்லை. காரணம் ஆயுள் அஷ்யூரன்ஸ் வாங்கப்படுவதல்ல, ஆனால் விற்கப்படுவதே.

இது எளிதில் ஊகிக்கக்கூடியது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் பூரண ஆயுள் காலம் ஜீவிக்க முடியுமென்றே எதிர்பார்க்கிறான். எதிர்காலத்தில் அளவில்லாத நம்பிக்கையுள்ளவனாகப் பிற்காலத்திற்கெனப் பாதுகாப்புத் தேடுவதை ஒத்திப் போடுகிறான். ஏதாவது அபாயம் நேருவதானால், தனக்கல்ல, அயலான் ஒருவனுக்கே அவ்வாறு நேருமென நினைக்கிறான். எனினும், நாம் நினைப்பதுபோல் நன்மையே எப்பொழுதும் நேருவதில்லை. எனவே ஒரு மனிதன், மனைவி, குழந்தைகளின் நலனைப் பொறுத்த மட்டில் இன்ஸ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் இருப்பது பெரிய அதிர்ஷ்டம். இந்த ஏஜெண்டுகள் ஒருவரின் விருப்பையோ, வெறுப்பையோ பொருட்படுத்தாது உதவி புரியும் உண்மைநண்பர்களாக விளங்குகின்றனர்.

### சிலோன் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்,

தலைமை ஆபீஸ்:
69, இராணி வீதி — கொழும்பு.

Ceylon Insurance Co. Ltd., 69, Queen St., Colombo

## விற்பனைக்குத் தயார்!

"அழகிய கிறிஸ்மஸ் வாழ்த்துகள்"
பலவித வர்ணப் படங்களுடன்.

தனிப்படங்கள் ஒன்று: 2, 3, 6, 7, 10, 15, 17 சத வீதம்.

போஸ்காட் அளவுள்ள வாழ்த்துகள் ஒன்று: 7, 8 சத வீதம்.

(Folded) மடித்த வாழ்த்துகள்: 8, 12, 14 சத வீதம்.

அமெரிக்கன் படங்கள்: 75 சத வீதம்.

(முற்பணமின்றி வி. பி. அனுப்பப்படமாட்டாது)

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, December 10-1953